அழகுசாதன, அன்பளிப்பு விளையாட்டு, பிளாஸ்ரிக் பொருள்களையும் மணிக்கூடு றேடியோ பொலித்தீன் வகைகளையும் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
ஜெயா
அழகு மாடம்
187, இராசன் தெரு, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

றேடியோ, மணிக்கூடு பொலித்தீன் வகைகளையும் அழகுசாதன, அன்பளிப்பு விளையாட்டு, பிளாஸ்ரிக் பொருள்களையும் உதிரியாகப் பெற்றுக்கொள்ள
ஜெயா
அழகு மாடம்
177 A, இராசன் தெரு, யாழ்ப்பாணம்.
(சி/1153)

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 06 சனிக்கிழமை (20 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 174

# ஆனையிறவில் புலிகள் தாக்கு; படையினர் 7 பேர் நேற்றுப் பலி!

## 14க்கும் அதிகமானோர் படுகாயம்

கொழும்பு, மே 20

ஆனையிறவு ராணுவ முகாம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்றுத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 14 இராணுவத்தினர் படுகாயம் அடைந்தனர்.

நேற்று கொழும்பில் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைச் செயலகம் விடுத்த அறிக்கையில இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஆனையிறவுப் பகுதியில் கடந்த சில தினங்களாக விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருவது தெரிந்ததே.

கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற மோதலில் மூன்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

ஆனையிறவு இராணுவ முகாமின் தென்பகுதி இராணுவ காவலரண் ஒன்றின் மீதே புலிகள் நேற்றைய தாக்குதலை நடத்தி இருந்தனர். (இ-3-7)

## விறகு எடுக்கச் சென்றவர் படையினரின் சூட்டுக்கு பலி

### அம்பனை பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 20

வீட்டுத் தேவைக்கென விறகு எடுத்துவரச் சென்றவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவ்விடத்திலேயே உயிரிழந்தார். இருவர் காணாமற் போய்விட்டனர்.

அம்பனை வயல் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டியைச் சேர்ந்த மாணிக்கம் சிவா (வயது 25) என்பவரே மரணமானவராவார்.

மல்லாகம் குளமன்கால் பகுதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு ராஜா (வயது 19), சுன்னாகத்தைச் சேர்ந்த நாகலிங்கம் சுகந்தன் (வயது 21) ஆகிய இருவருமே காணாமற் போனவர்களாவர்.

இறந்தவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகளின் உதவியுடன் மீட்டெடுக்கப்பட்டு நேற்றுக் காலை யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

## படையினரிடம் சிக்கிய ஐவர் நேற்று விடுவிப்பு

வடமராட்சி, மே 20

பெரியவிளானில் வைத்து கடந்த 17 ஆம் திகதி இராணுவத்திடம் அகப்பட்டுக்கொண்ட 5 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த வெலிச்சோர் செபமாலை [33 வயது] சகோதரர்களான பத்திநாதர் அன்ரன், உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த பத்திநாதர் தேவதாஸ் [42 வயது] ஆகிய மூன்று சிவில் தொழிலாளர்களும், சில்லாலை மேற்கைச் சேர்ந்த ஜோசப் கீதபொன்கலன் அன்ரன் ஜுட் [20 வயது], றெமின்டி மெல்ஸ்ரன் [18 வயது] ஆகிய இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி மாணவர்களுமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

விடுதலை செய்யப்பட்ட 5 பேரும் காங்கேசன்துறையிலிருந்து கோமாரி கப்பலில் பருத்தித்துறைக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் அழைத்துவரப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். [இ-173]

## சொந்த இடங்களுக்கு திருப்ப மக்கள் அச்சம்

வடமராட்சி, மே 20

தொண்டமானாறு, செருடாவில் ஆகிய பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தோர் இன்னமும் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப வில்லை. வலலாய் பகுதியிலிருந்து இப்பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் இன்னமும் மேற்கொள்ளப்பட்டு வருவதே இதற்குக் காரணம்.

இடம் பெயர்ந்தோர் வடமராட்சியின் ஏனைய பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

## நான்கு படையினர் வவுணதீவில் பலி

யாழ்ப்பாணம், மே 20

மட்டக்களப்பு, வவுணதீவில் புலிகள் நடத்திய தாக்குதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 1-45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாமிலிருந்து ஐம்பது மீற்றர் தொலைவிலிருந்த சோதனைச் சாவடி மீது உழவு இயந்திரத்தில் வந்த விடுதலைப் புலிகள் நடத்திய இத் தாக்குதலின் போது புலிகளுக்கு எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை.

கொல்லப்பட்ட படையினரில் இருவர் பொலீஸார் இருவர் இராணுவத்தினர்.

இதேவேளை குறிஞ்சாமுனை எனும் இடத்துக்கு விதித் தடைகள் ஆற்றவென வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் ரி-56

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ராணுவம் அமைக்க கோரிக்கை

கொழும்பு மே 20

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு என்று தமிழ் இராணுவப் படைப்பிரிவு ஒன்றை அமைக்குமாறு ஈ பி டி. பி அமைப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கோரியுள்ளது

அந்தக் கோரிக்கைக்கு ஜனாதிபதி எதுவித பதிலும் கூறவில்லை என்று ஈ பி டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## முகத்துவாரம் கடற்கரையில் நேற்று

## தலையில சூட்டு காயத்துடன யாழ்.இளைஞர் சடலம் மீட்பு

கொழும்பு, மே 20

கொழும்பு முகத்துவாரம் காக்கைதீவுக் கடற்கரையில் இருந்து தமிழ் இளைஞர் ஒருவரின் சடலத்தை முகத்துவாரம் பொலிஸார் நேற்றுக் காலை மீட்டனர்.

சடலத்தின் கண்கள் கட்டப்பட்டிருந்தன. தலையில் துப்பாக்கிச் சூட்டு காயம் காணப்பட்டது

கொலலப்பட்ட பிரஸ்தாப இளைஞர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை ஜெயரத்தினம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இக் கொலைச் சம்பவம் குறித்து பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். [ஐ-6]

## பலாலியில் 2 படையினர் பலி

கொழும்பு, மே 20

பலாலி இராணுவ முகாமில் இருந்து முன்னேறிய படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் 2 படையினர் கொல்லப்பட்டதாக நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [இ-3]

## கொழும்பு துறைமுகத்தில் கடுமையான பாதுகாப்பு

கொழும்பு, மே 20

கொழும்பு துறைமுகப் பகுதிக்குள் நுழையும் சகல வாகனங்களையும் சோதனை செய்யும் நடவடிக்கையை படையினர் நேற்று ஆரம்பித்தனர்.

விடுதலைப்புலிகள் கொழும்புத் துறைமுகத்தை தாக்கலாம் என்ற அச்சத்தினாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்துக்குள் நிற்கும் கப்பல்கள் மற்றும் ''கொன்ரயினர்''களை தாக்க புலிகள் திட்டமிட்டுள்ளதாக புலனாய்வு அறிக்கைகள் கிடைத்துள்ளதாக கடற்படை அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

வெடிகுண்டு சோதனை நிபுணர்கள் துறைமுகத்தின் மூலை முடுக்கு எங்கும் சல்லடை போட்டு சோதனை நடத்தி வருகின்றனர்.

துறைமுக வளாகத்திலும் துறைமுகத்துக்கு வெளியேயும் புதிய பாதுகாப்பு ஒழுங்குகள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

பொருள்களுடன் லொறிகள், கொள்கலன்கள் என்பன

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு எதிரான யுத்தம் நீண்டகாலம் தொடரலாம்

## சிரேஷ்ட ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 20

''விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை கடுமையானதாக இருக்கும். அத்துடன் நீண்டகாலம் அது நீடிக்கலாம்.''

இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு ராய்ட்டருக்கு தெரிவித்துள்ளார்.

தமிழ் தீவிரவாதிகளின் கடுமையான, திடீர் தாக்குதல்களினால் நிலைகுலைந்து அதிர்ச்சிக்குட்பட்டிருக்கும் இலங்கைப் படையினர் நீண்ட கடுமையான யுத்தத்துக்கு தம்மை தயார்படுத்தி வருவதாக பாதுகாப்பு அதிகாரிகளும், ஆய்வாளர்களும் தெரிவிப்பதாக ராய்ட்டர் தெரிவித்தது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்த காலத்தில் கிழக்கு பிராந்தியத்தில் புலிகள் தம் அணிகளை திரட்டி பலப்படுத்தியிருப்பதால், வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு முன்னதாக கிழக்கினை தம்வசப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுவரென பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பான ஆய்வாளர்கள் தெரிவித்ததாகவும் ராய்ட்டர் தெரிவித்தது.

மீண்டும் கிழக்கு பிராந்தியத்தினை முழு அளவில் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதே அரச படையினரின் நோக்கமென படை அணித் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

## 300க்கு மேற்பட்ட படையினர் பலி

யாழ்ப்பாணம், மே 20

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமாகி நேற்றுடன் முடிவடைந்த ஒரு மாத காலத்தில் குறைந்தது 305 ஸ்ரீலங்காப் படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலின் போது கொல்லப்பட்டுள்ளனர். (இ-7)

# இலங்கையில் இந்திய தலையீட்டை ஏற்படுத்த பாகிஸ்தான் முயற்சி!

## இந்து பத்திரிகை குற்றச்சாட்டு

புதுடில்லி, மே 20

பாகிஸ்தான் உளவு ஸ்தாபனமான ஐ. எஸ். ஐ. இன் உதவியுடன் கூடிய விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள், இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியாவை மீண்டும் தலையிட வைப்பது என்ற பாகிஸ்தானின் முக்கிய குறிக்கோளுக்கு சாதகமாக அமையும்.

இந்தியாவில் வெளியாகும் 'இந்து' பத்திரிகை இவ்வாறு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ஜம்முவிலும், காஷ்மீரிலும் தீவிர பணியில் ஈடுபட்டுள்ள இந்தியப் பாதுகாப்புப் படையினர் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவது தான் பாகிஸ்தானின் அடிப்படை நோக்கமாகும்.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு கலவரங்களை அடக்கும் இந்தியப் பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதும் பாகிஸ்தானின் முயற்சியாகும். இதுவரையில் இந்தியப்படைகளை வடக்கு, வட கிழக்கு பகுதிக்கு திசை திருப்புவதில் பாகிஸ்தான் வெற்றி கண்டுள்ளது.

அண்டை நாடுகளில் அரசியல் ஸ்திரத்தன்மையைக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கிரஸ் அதிருப்தியாளர் நேற்று டில்லியில் பேரணி

புதுடில்லி, மே. 20

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ், காங்கிரஸ் கட்சித் தலைவர் பதவியில் இருந்து இறங்க வேண்டும் என்றுகோரி எதிர்ப்புப்பேரணி ஒன்று காங்கிரஸ் அதிருப்தியாளர்களால் நேற்று புதுடில்லியில் நடத்தப்பட்டது.

காங்கிரஸ் தொழிலாளர் மாநாடு என்று அழைக்கப்பட்ட இந்த எதிர்ப்புப்பேரணியில் நரசிம்மராவ்விற்கு எதிரானவர்கள் என்று கருதப்படும் 30 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்பாக கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நரசிம்மராவ் விலக வேண்டும் என்று பேரணியில் எதிர்ப்புக் குரல் எழுப்பப்பட்டது.

காங்கிரஸ் கட்சியில் ராவ்வுக்கு பதிலாக புதியவர் ஒருவரை தலைமைப் பதவிக்கு தெரிவதன் மூலம்பிளவை ஏற்படுத்த அதிருப்தியாளர்கள் முயலக்கூடும் எனவும் —

அவ்வாறு முன்மொழியப்பட்டவர்கள் பட்டியலில் என். ரி. திவாரியின் பெயர் முன்னணியில் உள்ளதாகவும் — பத்

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## ★ ஒரேசமயத்தில் தாக்க திட்டமாம்

# கொழும்பில் பொலீஸ் நிலையங்கள் உஷார்

கொழும்பு, மே 20

கொழும்பில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களையும் முழு உஷார் நிலையில் வைத்திருக்குமாறும்—

பொலீஸ் நிலையங்களைச் சுற்றி சக்தி வாய்ந்த மின் விளக்குகளைப் பொருத்துமாறும் கொழும்பு பிரதிப் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொழும்பு பொலீஸ் நிலையங்களைத் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றும் திட்டம் குறித்து தகவல் கிடைத்திருப்பதை அடுத்தே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களை விசாரணை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# அமைதி, சமாதானம் ஏற்படுத்துவது நீண்ட கடினமான போராட்டம்

## அஸ்ஸாஜி தேரர் கூறுகிறார்

கொழும்பு, மே 20

அமைதி சமாதானத்தை அடைவது நீண்ட கடினமான போராட்டம் ஆகும்

பல்வேறு மதங்களுக்கிடைப்பட்ட சமாதான அமைப்பின் செயலாளர் வண மாதம்பேகம அஸ்ஸாஜி தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைதி சமாதானத்துக்காக வேலை செய்யும் எல்லாக் குழுக்களையும் ஒன்றிணைப்பதே நேற்றைய கூட்டத்தின் நோக்கமாகும் என பி. பி. ஸி. சந்தேசிய சேவையின் கொழும்பு முகவர் எல்மோ பெனாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

[ 6ஆம் பக்கம் பார்க்க]

# பிரபா - சந்திரிகா நேரடியாகவே பேச்சுக்களை நடத்த வேண்டும்

## அரச தரப்பு எம.பி. கோருகிறார்

கொழும்பு, மே 20

இனிமேல் பேச்சுக்கள் இடம்பெறுவதாயின் ஜனாதிபதி சந்திரிகாவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் [illegible] கப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவேண்டும் [illegible] மேற்கண்டவாறு அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பீலிக்ஸ் பெரேரா கூறினார்.

மறைந்த விஜேதமாரதுங்க, ஒஸி அபேகுணசேகரா ஆகியோர் [illegible] யாழ்ப்பாணம் வந்து தளபதி கிட்டு [illegible] களில் பீலிக்ஸ் பெரேராவும் ஒருவர்.

அரசு தனது சமரச முயற்சிகளை இன்னும் கைவிடவில்லை என்றும் —

ஏனையோர் பேச்சுக்களில் கலந்துகொள்வதால் தடங்கல்கள் ஏற்படுகின்றன என்றும் பீலிக்ஸ் பெரேரா மேலும் கூறினார். (இ-14)

## வெளிநாட்டு செய்தியாளர் யாழ்ப்பாணம் வரத் தடை!

கொழும்பு, மே 20

வெளிநாட்டு, உள்நாட்டு செய்தி ஏஜென்சிகளைச் சேர்ந்த செய்தியாளர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கு அரசு தடை விதித்துள்ளதாக தெரியவருகிறது.

வெளிநாட்டு, உள்நாட்டு செய்தி ஏஜென்சிகளைச் சேர்ந்த செய்தியாளர்கள் பலர் யாழ்ப்பாணம் சென்று நேரடியாக செய்திகளைச் சேகரிக்க பாதுகாப்பு அமைச்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரும் மலர்கள்

(வீடியோ சேவை)

உங்களின் மங்களகரமான நிகழ்வுகளை நவீன மிக்சர் கமெராமூலம் வீடியோ, புகைப்படம் பிடித்திட நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே இடம்

இல. 82, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை:

**சக்தி வீடியோ**

இருபாலைச் சந்தி, கோப்பாய்.

(36722)



வளரும் குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் போசாக்கை உறுதி செய்கிறது

## ஜீவாகாரம்

உங்கள் விசேட ஓடர்களுக்கு அறிவித்தால், குறிப்பிட்ட இடத்தில் விநியோகிக்கப்படும்.

**அண்ணா தொழிலகம்,**
இணுவில்.

[சி-1400]


## கண்டீர்களா?

யாழ். அரசினர் பொது வைத்தியசாலையில், மருத்துவத்துறை திணைக்களத்தில் கடமை ஆற்றும் திரு. ஜெயராசா என்பவரது இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா மூவாயிரத்துக்கு மேல், தபால் உறையில் இப்பணம் இருந்தது. தவறுதலாக தொலைந்து விட்டது. [யாழ். பல்கலைக்கழகத்திற்கும் இவ்வைத்தியசாலைக்கும் இடையில்] யாராவது கண்டெடுத்திருந்தால் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக நிதிப் பிரிவு


[சி/1242]


## A/L 95 DAY

கணக்கியல்
**D. SAM**
மீட்டல் வகுப்புக்கள்
நடைபெறுகின்றன
நேரம் 12—1 மணி

**இக்ஸ் அக்கடமி**
[8547] தாவடி.


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



செல்வன்
**செல்வரத்தினம் செந்தூர்குமரன்**
(சின்னத்தம்பி)

தோற்றம்: 13 — 05 — 1977 மறைவு: 06 — 04 — 1995

விண்ணில் கலந்த உன் உயிரை
எண்ணிக் கலங்கும் இதயங்கள் எத்தனையோ
நினையாத நேரம் எம்மைப் பிரிந்த
அணையாத ஒளி விளக்கே செந்தூர்குமரா
அன்பின் பிறப்பிடமாய் சின்னத்தம்பி என்று
ஆசையுடன் அழைத்த நாங்கள்
உன்னையே எண்ணித் தவிக்கின்றோம்
உன் நினைவுகளே எம் கண்முன்னே -
நிற்குதையா!

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனையே வேண்டுகிறோம்.

இன்று [20-05-95] சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றும்படி உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
சிறிய தாயார், தாய், சகோதர, சகோதரிகள்.

ஐயனார் கோயிலடி,
சுன்னாகம்.

[36730]

# ஆசிரியருக்கான கஷ்டப்பிரதேச கொடுப்பனவுகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மே 20

புதிய ஆசிரியர் சேவை ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து, கஷ்டப்பிரதேச கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதே நேரத்தில் உண்மையான கஷ்டப் பிரதேசங்களை இனங்காண குழு ஒன்றையும் அமைச்சு நியமித்துள்ளது.

கஷ்டப்பிரதேசம் என நீண்டகாலமாக இனம் காணப்பட்ட பகுதிகளில் பொது வசதிகள் பல இருக்கின்றன என்பதை அரசு அறிந்ததையடுத்தே இந்த கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்தது.

கொழும்புக்கு வெளியே உள்ளதும், பிரதான வீதிகளுக்கு சமீபமாக உள்ளதும், திருப்திகரமான தபால் வசதிகள் கொண்டதுமான பிரதேசங்களை கஷ்டப் பிரதேசமாக கருதமுடியாது என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார். (இ-3)

## ஹட்டனில் மூவர் கைது

கொழும்பு, மே 20

கொழும்பில் இருந்து ஹட்டன் சென்ற மூன்று இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த பஸ் ஹட்டனை அடைந்த போது, இம் மூவரையும் சந்தேகத்தின் பேரில் பொலீஸார் கைது செய்தனர். (ஓ-5)

## ஜே.வி.பியின் தலைவராக சோமவன்ஸ

கொழும்பு, மே 20

ஜே.வி.பியின் புதிய தலைவராக சோமவன்ஸ அமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று அந்த அமைப்பு அறிவித்துள்ளது. (ஐ-6)

## ஆலயங்களில்

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பார்வதி அம்பாள் சமேத ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய மகா கும்பாபிஷேக தின விழா இன்று சனிக்கிழமை இடம்பெறும்.

காலையில் நவோத்தர ஸகஸ்ர சங்காபிஷேகமும், பிற்பகல் திருக்கல்யாணமும் இடம்பெற்றுமாலை3மணிக்கு பெருமான் ஆலய வீதி வலம் வருவார்.

மதியம் மகேஸ்வர பூசை நடைபெறும். (ஓ-14)

★ ★ ★

மீசாலை தெற்கு ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 11ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது.

10ஆம் நாளாகிய இன்று சனிக்கிழமை மணவாளக் கோலமும், பகலில் சகஸ்ர சத சங்காபிஷேகமும் இடம் பெறும். மதியம் அன்னதான நிகழ்வு நடைபெறும். (ஓ-14)

★ ★ ★

சாவகச்சேரி கிழக்கு பெரிய மாவடி ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் இன்று சனி காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 28ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஓ-31)

★ ★ ★

சரித்திரப் பிரசித்தி பெற்ற வில்லூன்றி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஓ-14)

## நாளை

இலங்கை இந்துமத குருமார் ஒன்றியத்தின் யாழ். மாவட்ட மகாசபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். [ஓ-152]

★ ★ ★

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 39ஆவது ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு மணிக்கு சரஸ்வதி கலையரங்கில் நடைபெறும்.

நிலையத் தலைவர் க. இராசலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி கலந்து கொள்வார்.

பட்டி மண்டபம், நடனம் நாடகம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறும். [ஓ 14]

## இன்றும் நாளையும்

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில்

"தீ-சுமந்தோர்"

நாடகம்

காலை 9. 30 ) 4
மாலை 3. 30 ) காட்சிகள்

ரிக்கெட்:- மண்டப வாயிலில்
S. S. U

(36733)

## தமிழீழத்தில் எமது சொந்தக் காலில் நாம் நிற்க வேண்டும்

### மட்டு மகா வித்தியாலயநிகழ்வில் உரை

சாவகச்சேரி, மே 20

"எமது மண்ணை மீட்கும் போது தமிழீழத்தில் நாம் எமது சொந்தக் காலில் நிற்க வேண்டும்"

கடந்த 9ஆம்திகதிமட்டுவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராக கலந்து உரை நிகழ்த்திய தமிழீழ கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு.க. அருண்மாஸ்டர் தமது உரையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழீழ மண்ணை வளமான பூமியாக நாம் ஆமைக்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் இரு விமானங்கள் வீழ்ந்தவுடன் தமிழீழம் வந்துவிட்டதாக நாம் எண்ணக்கூடாது. எனவே அதற்காக எங்கள் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழியில் ஆண்கள், பெண்கள் என்ற பால் வேறுபாடுகள் இல்லாமல் இவ் விடுதலைப் போராட்டத்தில் இணைய வேண்டும் என்றார்.

பாடசாலை அதிபர் திரு. மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா- கணேசலிங்கம் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. கணேசன், நா. சத்தியநாதன், யோ. யோன்பிள்ளை தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி சோதியா ஆகியோரும் உரைநிகழ்த்தினர். போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை திருமதி புஸ்பா கணேசலிங்கம் வழங்கினார்.

## பிற்போடப்பட்டுள்ளது

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் 21-5-95 ஞாயிற்றுக்கிழமை நடத்த இருந்த கல்லூரி நூலக வளர்ச்சி நிதிக்கான சிட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பழைய மாணவர் சங்கம்

[36734]

## ஐங்கரன் விளையாட்டுக் கழகம்

நடத்தும்
உலக சர்வதேச கரப்பந்தாட்ட
**100 ஆவது ஆண்டையொட்டி**
கரப்பந்தாட்டச்
**சுற்றுப் போட்டியும்**
**பரிசளிப்பு வைபவமும்**

இடம்:
ஐங்கரன் விளையாட்டு மைதானம்
(O L R தேவாலய அருகில்)

காலம்:
20-05-1995 சனிக்கிழமை [அரையிறுதி ஆட்டம்]
21-05-1995 ஞாயிற்றுக்கிழமை [இறுதி ஆட்டம்]
மாலை 6 30 மணி
(மின்னொளியில் நடைபெறும்)

தலைவர்:
திரு க. நித்தியானந்தன்
(யாழ். நகர் கிராம அதிகாரி)

பிரதம விருந்தினர்;
திரு. க. பொன்னம்பலம்
(மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. க வி. விமலராஜா
(மாவட்ட விளையாட்டு அதிகாரி)
திரு. சரா. புவனேஸ்வரன்
(விளையாட்டுத்துறை ஆசிரியர், யாழ் மத்தியகல்லூரி)
திரு. முருகநேசன்
(செயலாளர், யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு]

கரப்பந்தாட்ட [SET UP] அரையிறுதியாட்டத்தில் பங்குபற்றும் கழகங்கள்:

★ நாயன்மார்கட்டு பாரதி வி. கழகம் எதிர் மட்டுவில் கலைவாணி வி. கழகம்
★ யாழ். நகர் ஐங்கரன் வி கழகம் எதிர் ஆவரங்கால் மத்திய வி. கழகம்

இறுதிநாள் ஆட்டத்தில் காட்சிக் கரப்பந்தாட்டம் [பெண்கள்]

★ நாயன்மார்க்கட்டு பாரதி வி. கழகம் எதிர் பாஷையூர் சென். அன்ரனிஸ்வி. கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டு நிர்வாகக்குழு
யாழ். ஐங்கரன் விளையாட்டுக் கழகம்

விளம்பர அன்பளிப்பு:
"மேவின் தையல் நிலையம்"
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[36737]

## இருவர் கைது

பெற்றோலின், சேலைன் போன்றவற்றை 50 பெட்டிகளில் பதுக்கி வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்கள் புறக்கோட்டை பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இவற்றை விடுதலைப் புலிகளுக்கு அனுப்புவதற்காகவே சேகரித்து வைத்திருந்திருக்கலாம் என்று பொலீஸார் தெரிவித்தனர். (ஓ-5)

## கூட்டுறவு சபை பணிப்பாளர் தெரிவு

யாழ்ப்பாணம், மே 20

யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபையின் புதிய பணிப்பாளர் சபைத் தெரிவும் ஆறாவது வருடாந்த ஒன்று கூடலும் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ், மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெறும். (ஐ-4)

## மரணம்

சைக்கிளில் வந்தவர் மயங்கி வீழ்ந்து மரணமான சம்பவம் நேற்று முன்தினம் தனங்கிளப்பு வீதியில் இடம் பெற்றது.

30க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதுடைய இந்த நபரின் சடலம் அடையாளம் காணப்படுவதற்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. [இ-117]


## ACCOUNTANCY CLASSES

NOV - DEC - 1995

C. I. M. A. Stage I
I. A. B. (All Stages)

வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன

விவரங்கட்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. PETER'S LANE, JAFFNA.

(சி-1404)


உ
சிவமயம்

இந்து சமயப்பேரவை, யாழ்ப்பாணம்
குப்பிழான்
**காசிவாசி செந்திநாதையர்**
ஞாபகார்த்தப் பேருரையும்
**"இந்து தர்மம்" மலர் - 08**
**வெளியீட்டு விழாவும்**

இடம்: நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனம்

காலம்: 21 - 05 - 95 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணி

தலைவர்:
ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அவர்கள்
[தலைவர், இந்து சமயப் பேரவை]

### நிகழ்ச்சி நிரல்

தேவாரம்:
சங்கீத பூஷணம் பி. சந்திரசேகரம் அவர்கள்

மௌன அஞ்சலி:

வரவேற்புரை:
திரு. ஆ. மாலிங்கம் அவர்கள்
(உப தலைவர், இ. ச. பே.)

ஆசியுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

காசிவாசி செந்திநாதையர் ஞாபகார்த்தப் பேருரை:
பண்டிதர் மு. கந்தையா B. A. அவர்கள்
'காசிவாசி செந்திநாதையரின் சைவ சித்தாந்த வேதாகம ஆராய்ச்சி'

சிறப்புரை:
செல்வன் ஏ. அனுசாந்தன்
[காசிவாசி செந்திநாதையர் ஞாபகார்த்த சபை, குப்பிழான்]

வெளியீட்டுரை:
திருமதி கலைவாணி இராமநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்)

முதற்பிரதி பெறுபவர்:
திரு. வே. பொ. பாலசிங்கம் அவர்கள்
(யாழ். மாநகர சபை, ஆணையாளர்]

சிறப்புப் பிரதிகள் பெறுவோர்:
குப்பிழான் வாழ் இந்து சமய அபிமானிகளும் ஏனையோரும்

நன்றியுரை:
திரு. சி. சக்திகிரீவன் அவர்கள்
(செயலாளர், இந்து சமயப் பேரவை)

தேவாரம்:

அனைத்து இந்து சமய அபிமானிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்

சஞ்சிகை வெளியீட்டு உதவி:
குப்பிழான் வாழ் இந்து சமய அபிமானிகள்

நா. முத்தையா, தலைவர் — சி. சக்திகிரீவன், செயலாளர்

(சி-1243)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூச்சி நீக்கப்பட்ட பொமரேனியன் ஆண், பெண் நாய்க் குட்டிகள் பிறவுண் கறுப்பு கலந்த நிறத்தில் விற்பனைக்குண்டு. தொடர்பு: றோசாத் தோட்டம், தலங்காவல் பிள்ளையார் கோயில் அருகில் திருநெல்வேலி கிழக்கு. (36720)

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள், பூச்சி நீக்கப்பட்டு, 30 நாட்கள் நிரம்பியவை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 15, சினியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம் (36725)

### காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, முளாய் றோட்டில் மாவடிச் சந்திக்கு அருகில் எட்டு பரப்புக்காணி இரண்டு முகப்புடனும், கிணற்றுடனும் விற்பனைக்குண்டு தொடர்பு: க. பரமேஸ்வரன் இல 90/4. கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் (36709)

### வீடு விற்பனைக்கு

V K செல்லத்துரையினது சகல வசதியுமுடைய ஐந்து அறைகள் கொண்ட கல் வீடு மாட்டுவில் தெற்கு, சாவகச்சேரி (அக்கினி வைரவர் கோயிலடியில்) விற்பனைக்குண்டு. தொடர்பு: க. அருளம்பலம், கைதடி நுணாவில், சாவகச்சேரி. (36690)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தினமும் காலை 7-00 மணி தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். எங்கள் ஸ்தாபனத்திற்கு முகப்பில் இருக்கும் கற்பனை நிலையம் எங்களுடையதல்ல உங்கள் வசதிக்காக எங்கள் வாசலில் Nallur Video Centre பெயர்ப் பலகை உண்டு. (36726)

### கோழிக்குஞ்சு விற்பனை

Prima Lohman White ஒன்றரை மாத வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முனீஸ்வரர் ஒழுங்கை. முத்திரைச் சந்தையடி, நல்லூர். (36727)

### புலமைப் பரிசில் 1995

ஆண்டு 5க்கான புலமைப் பரிசில் புதிய திட்டத்திற்கமைய மாதிரிப் பரீட்சை 21-5-95 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். விண்ணப்பதாரர் தேவையானோர் தொடர்பு கொள்ளவும்: புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (36721)

## கொடுப்பனவு

தென்மராட்சி மே 20

தென்மராட்சி பிரதேசத்தில் காசநோய், தொழுநோய் புற்றுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர்களுக்கான மே மாதக் கொடுப்பனவு தென்மராட்சி பகுதியில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகிறது (ந-117)

## ஐ தே. கட்சி பத்திரிகை வெளிவராது

கொழும்பு, மே 20

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தியோக பூர்வ பத்திரிகையான 'சியரட்ட' வெளியிடப்பட மாட்டாது என்று கட்சித் தலைமையகம் தெரிவித்துள்ளது

சியரட்ட'' பத்திரிகையில் அண்மைக் காலமாக இனவாதக் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வந்தன (ஐ)

மொட்டை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜோடியாக நடிக்க மாட்டேன் என்று ஒரு நிபந்தனை மட்டும்தான்''— என்று கூறி பதிலளித்தார் சுவாமி.

தலைக்குப் பூசிய கறுப்பு 'டை' பற்றி செய்தியாளர்கள் கேட்டதற்கு 'இதென்ன பெரிய விசயம். இந்த ஆட்சியைக் கவிழ்க்கிற திருப்பதிக்குப் போய் மொட்டை போட்டுக் கொள்வேன்— என்று பதிலளித்தார் சுவாமி.

---



அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம்

## "இலகுவான ஆசன செய்முறை" நூல் வெளியீட்டு விழா

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

காலம்: 21 - 05 - 1995

பி. பகல் 3-00

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகி சரஸ்வதி

(36702)

---

பத்தாம் வருட

## நினைவு தினம்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 | 08 |
| — | — |
| 03 | 06 |
| — | — |
| 1921 | 1985 |

### அமரர் வே. சி. நடராசா

(மின் கைத்தொழில் நிறுவன ஸ்தாபகர்)

திவச திதி: 20 – 05 – 1995

எங்கள் குடும்ப தலைவா!

எங்கள் அன்பு ஐயாவே!

நீங்கள் இல்லாமல் உங்கள் நினைவலைகளுடன் பத்து ஆண்டுகள் கடந்து விட்டோம். இன்னும் எவ்வளவு காலம் கடக்கவிருக்கிறோமோ தெரியவில்லை.


இன்றைய தினம் உங்கள் நினைவாக உங்களின் இல்லத்தில் உற்றமும் சுற்றமும் புடை சூழ ஆத்ம சாந்திப் பூசையும் மகேஸ்வர பூசையும் செய்து இறைவனை இறைஞ்சித்து நிற்கிறோம் ஐயா

மனைவி மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நடராசா வளவு
26-28, திருநெல்வேலி சிவன் புது வீதி,
யாழ்ப்பாணம். [சி-1238]

---

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வல்லிபுரம் ஜெகதீசன்

(முன்னாள் பொறியியலாளர் உர ஆக்கக் கூட்டுத்தாபனம், லங்கா சிமெந்து லிமிடெட்)

ஆண்டவன் படைப்பு: 17 – 10 – 1946
ஆண்டவன் அடியில்: 20 – 05 – 1987

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து எங்கள் குடும்ப ஒளி விளக்காய் எம் மை வழி நடத்தி மீளாத்துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், தந்தை,
சகோதரர்கள், மைத்துனர்கள்

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம் (8405)

---

கொக்குவில் நந்தாவில்
சுற்புலத்து மனோன்மணி அம்பாள்

### ஆலய பரிபாலனசபை

மேற்படி சபையின் வழிபடுவோர் மகாசபைக் கூட்டம் 27 – 05 – 1995 நடைபெறும் என விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது தவிர்க்க முடியாத காரணத்தால் 28 – 05 – 1995 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு நடைபெறும் என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றேன்.

நன்றி.

சி. ஜெயபாலசிங்கம்,
செயலாளர்.

கொக்குவில் நந்தாவில்
சுற்புலத்து மனோன்மணி அம்பாள்
ஆலய பரிபாலனசபை. (36723)

---

## புதிய பெரடெனியா இன்ஸ்ரிரியூட்

K. K. S. வீதி, கொக்குவில்.

**O/L** சகல பாடங்களுக்குமான மீட்டல் வகுப்பு நடைபெறுகின்றது.

| | | |
|---|---|---|
| கணிதம் | — | இரா. அருட்செல்வம் |
| | | சண். வாமதேவன் |
| | | தி சந்திரகுமார் |
| விஞ்ஞானம் | — | இரா செல்வவடிவேல் |
| | | A. K. மூர்த்தி |
| | | இராமநாத் |
| சமூகக்கல்வி | — | ஐ புவனேந்திரன் |
| ஆங்கிலம் | — | எஸ் சந்திரமௌலி |
| வர்த்தகம் | — | எஸ், பரமசிவம் |
| சித்திரம் | — | செல்வி பிரேமினா |
| தமிழ் சமயம் | — | திரு ஞான.திருக்கேதீஸ்வரன் |
| விவசாயம் | — | M. சிவலிங்கம் |

(சி-1393)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 | 18 |
| — | — |
| 09 | 04 |
| — | — |
| 1927 | 1995 |

திருமதி

### அன்னலட்சுமி சின்னத்துரை

எமது வாழ்வின் அடிமரமாய் நின்று எம்மை வேரூன்றி வாழவைத்த எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தி வேண்டி அம்பாளை என்றும் பிரார்த்திப்போமாக.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில் [36724]

---

## 4 ஆம் வருட நினைவுத் துளிகள்



| பாரில்: | விசும்பில்: |
|---|---|
| 15 | 03 |
| — | — |
| 10 | 06 |
| — | — |
| 1936 | 1991 |

### அமரர் க. தியாகராஜா

(இளைப்பாறிய M. L. T.)

திதி: 20 – 05 – 1995

எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் கூட எண்ணமதில் நினைவலைகள் நீங்காது ஆட மனைவி மக்களுக்கு நல்வழிகள் காட்டி மறைந்து விட்டதை நாம் எப்படி மறப்போம்...?

உங்கள் இலட்சியப் பாதையில் நிற்கும்;

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்திமார்.

உடுவில். (36692)

---

உ

மீசாலை தெற்கு

அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி

## அலங்காரத் திருவிழா பூர்த்தி

முருகன் அடியார்களே!

இன்று 20 — 05 — 1995 சனிக்கிழமை முருகப் பெருமானின் மணவாளக் கோல நன்னாளை முன்னிட்டு காலை 7-00 மணிக்கு சகஸ்ர (1008) சங்காபிசேகம் ஆரம்பமாகி நிறைவு பெறும்.

மாலை 5-00 மணிக்கு சண்முகப் பெருமானுக்கு விசேட சண்முகார்ச்சனை
ஆலய பிரதம சிவாச்சாரியார்

வேதாகம சோதிட பூஷணம்
**சிவஸ்ரீ. சி. சிதம்பரநாதக் குருக்கள்**
தலைமையில் நடைபெற்று,

ஆறுமுகப் பெருமான் தேவியர்கள் சகிதம்,

நாதஸ்வர மேதை
**மு. பஞ்சாபிகேசன் குழுவினரின்**
மேளக்கச்சேரியுடன் வீதி உலா வரும் காட்சியும் நடைபெறும்.

தொடர்ந்து
''கந்தபுராணம்'' தொடர் விரிவுரையில்
**த. நாகேஸ்வரன்**
அவர்களின் பூர்த்தியுரை.

இதனையடுத்து
விசேட சொற்பொழிவு
**"விழிக்குத் துணை"**
கம்பவாரிதி இ. ஜெயராஜ் [கம்பன் கழகம்]

அன்பர்கள் அனைவரும் அனைத்து நிகழ்விலும் பங்கு கொண்டு முருகப்பெருமானின் அருள் பெற்றுய்யும்படி வேண்டுகின்றோம்.

— ஆலய பரிபாலன சபையினர்.

[36668]

---

உ

## "சரயு" மலர் வெளியீட்டு விழா

இடம்: யாழ் இந்துக்கல்லூரி
குமாரசாமி மண்டபம், யாழ்ப்பாணம்.

காலம் 22-05-1995 திங்கட்கிழமை காலை 9மணி

### ★ நிகழ்வுகள் ★

★ மங்கள விளக்கேற்றல்:

★ கடவுள் வாழ்த்து

★ மௌன அஞ்சலி

★ ஆசியுரை:
திருமதி த. விஸ்வநாதன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், பட்டப்பின் கல்வி டிப்ளோமா / தே. க. நி.)

★ வரவேற்புரை:
திரு V. A. சிவராசா (மலர் இணையாசிரியர்)

★ தலைமையுரை:
திரு. பொ. ரவிச்சந்திரன் (ஒன்றியத்தலைவர்)

★ வெளியீட்டுரை:
செல்வி இ. வீரசிங்கம் (விரிவுரையாளர்)

★ சிறப்பு விருந்தினர் உரைகள்:
திரு நாக சண்முகநாதபிள்ளை
(செயலாளர், கல்வி மேம்பாட்டுப் பேரவை)
திரு கலாநிதி சபா. ஜெயராசா
(முதுநிலை விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

★ பிரதம விருந்தினர் உரை:
திரு. இ சிவானந்தன்
(கல்விப் பணிப்பாளர் வலயம் - 1)

★ மலர் வெளியீடு:
★ முதற் பிரதி வழங்குதல்
★ சிறப்புப் பிரதிகள் வழங்குதல்

★ மலர் ஆய்வுரை:
திரு சி. வேலாயுதம்
(முன்னாள் பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

★ ஏற்புரை
திரு. சு. பா. காசிநாதன் (மலராசிரியர்)

★ வாழ்த்துப்பா:
நிலைய ஆசிரிய பயிலுநர்

★ நன்றியுரை
திரு வே. அ. ஞானேந்திரன்
(ஒன்றியச் செயலாளர்)

ஆர்வலர் அபிமானிகளை பேரன்புடன் அழைக்கின்றோம்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர் ஒன்றியம்,
தேசிய கல்வி நிறுவகம்,
யாழ் இந்துக்கல்லூரி நிலையம்.

---

விளம்பர அன்பளிப்பு:

நீங்கள் விரும்பும் ஆபரணங்கள் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள்

## "நதியா நகை மாடம்"

இல. 2. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-1239)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளை கூறாமல் மறைத்து கட்டுக்கதை விடுகின்றது அரசு!

## பாதுகாப்பு விமர்சகர் கூறுகிறார்

வடககில் உள்ள படைமுகாம்கள் குறித்து ஆங்கில வார இதழ் ஒன்றின் பாதுகாப்புச் செய்தியாளர் வெளியிட்ட தகவல்களின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

புலிகளின் அடுத்த தாக்குதல் எப்போது எங்கே இடம்பெறும் என்பதே இப்போதைய கேள்வியாகும்.

1991ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட பூநகரி தளமே தாக்குதலுக்கு உள்ளாக்கப்படக்கூடிய அதிக வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில் இம்முகாம் அமைக்கப்பட்ட காலம் முதலே பிரபாகரன் அதன்மீது கண் வைத்து வருகின்றார்.

எனினும் விடுதலைப் புலிகளின் அடுத்த நடவடிக்கை எது என்பதை உறுதியாக எதிர்வு கூற முடியாது.

பூநகரியை விடுத்து வேறு ஒரு முகாமையும் அவர்கள் தாக்கக்கூடும்.

மழைகாலம் ஆரம்பித்த பின்னர் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துவார்கள் என்பதை பல ஆய்வாளர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் போரிடுவதற்கேற்ற தயார் நிலையில் இராணுவத்தினர் இல்லை

வடபகுதி இராணுவ முகாம்கள் விநியோகங்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

இந்த நெருக்கடியிலிருந்து இவற்றை விடுவிப்பதற்கான— பலப்படுத்துவதற்கான— எந்த ஒரு திட்டமும் இராணுவ உயர்பீடத்தினால் வரையப்படவில்லை என பல உயரதிகாரிகளும் ஜனாதிபதியிடம் விசனம் தெரிவித்துள்ளனர்.

### உணவு சேமிப்பு முகாம்களில் உள்ளதா?

முகாம்கள் எதுவும் விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்படவில்லை எனவும்—

மேற்படி முகாம்களில் 6 மாதங்களுக்கு போதுமான உணவு சேமிப்பில் உள்ளன எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பலாலியில் ஆறு மாதங்களுக்குத் தேவையான உலர் உணவு இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு கூறுவது பரிகாசத்திற்குரியது. அவ்வளவு நீண்ட காலத்துக்கு உணவைச் சேமித்து வைப்பதற்குரிய வர்த்தகக் களஞ்சியங்களைக் கொண்டது அல்ல பலாலி இத்தகைய இடத்தில் உணவைச்சேமித்து வைத்தால் ஆறு மாதத்துக்குக் குறைந்த காலத்துக்குள்ளேயே மனித பாவனைக்கு உகந்ததல்லாத நிலைக்கு அந்த உணவுப் பொருள்கள் கெட்டுப்போய் விடும்.

எந்த விதத்திலானாலும் அரிசி மற்றும் பருப்பு ஆகிய உணவுகளுடனேயே அடுத்த ஆறு மாதத்தை அங்குள்ள படையினர் கழிக்கவேண்டும் என பாதுகாப்பு அமைச்சு எதிர்பார்ப்பதுபோல் தெரிகிறது.

ஏனைய பாவனைப் பொருள்களின் கருவாடு அடுத்த சில வாரங்களில் முடிந்துவிடும். விமானத்தில் அனுப்பி வைக்கப்படவேண்டிய மரக்கறி வகைகள், பழவகைகள் இரண்டு வாரங்களுக்கு முன்னரே முடிந்து விட்டன.

### உண்மையை மறைக்க முயல்கின்றது அரசு

பொதுமக்களுக்கும் விசேடமாக ஏனைய முகாம்களில் உள்ள துருப்புகளுக்கும் உண்மையை எடுத்து விளக்கவேண்டிய பாதுகாப்பு அமைச்சு. அதனைத் தவிர்ப்பதற்காக இந்த விடயத்தில் முழு இரகசியம் பேணுவதுபோல செயற்படுகின்றது.

அரசசார்புத் தொலைத்தொடர்பு சாதனங்களைத் தவிர்ந்த அனைத்து தொடர்பு சாதனங்களுக்கும் எட்ட முடியாதவராக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க இருப்பதும் இதனால்தான்.

பத்திரிகையாளர்கள் வடக்குக்குச் செல்வதற்கான இரகசியத்தடை உத்தரவும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைமுறைக்கு வந்திருக்கிறது.

### கட்டுக்கதை

"புலிகளின் தளத்தை விமானப்படை தூள்தூளாக்கியதாக" அரச சார்பு தொடர்பு சாதனங்கள் கூறுவதும் சுத்தக் கட்டுக்கதையாகும்.

ஏவுகணைத் தாக்குதலை அடுத்து இத்தாலியத் தயாரிப்பான சியாமா செட்டி விமானங்களும் ஆர்ஜென்ரீனாத் தயாரிப்பான புக்காரா விமானங்களும் தரையில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. சீனத் தயாரிப்பான "எவ்7" சண்டை விமானங்கள் மட்டும் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

குண்டு வீச்சுத்தாக்குதல்களை நடத்த நான்கே நான்கு "எவ்7" விமானங்கள் மட்டுமே விமானப் படையிடம் இருப்பதால்—

இவை அதிவேகமாகப் பறப்பதால் எந்த இலக்கையும் குறிவைத்துத் தாக்குவது கஷ்டம் என்பதாலும்

இந்தக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் வெறுமனே துருப்புகளை தாங்கள் மறந்துவிடவில்லை என்பதை அவர்களுக்குக் காட்டவும் அவர்களின் மனோதிடத்தை உயர்த்தவுமே பயன்படும் எனக் கூறலாம்.

வடபகுதி முகாம்களுக்கான விமானப் போக்குவரத்து குறைக்கப்பட்டது தவிர ஏனைய வழித் தொடர்புகள் வழமைபோல் இடம்பெறுகின்றன என்று கூறி அமைச்சு பொதுமக்களின் காதில் பூ வைக்கப்பார்க்கிறது

### இரண்டு வழிகளே இருந்தன

வடபகுதிக்கு செல்வதற்கு இரண்டு வழிமுறைகள் மட்டுமே இதுவரையில் இருந்தன

விமானமூலம் பலாலிக்கும் அங்கிருந்து ஹெலிகள் மூலம் ஏனைய முகாமகளுக்கும் தொடர்பு கொள்வது ஒரு வகை.

கப்பல்கள் மூலம் தொடர்பு கொள்வது இரண்டாவது வகை

கடந்தமாதம் இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்து விமானப் போக்குவரத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

100பேர் பயணிக்கக் கூடிய இரண்டு 'வை 8' ரக விமானங்களும் 50பேர் செல்லக் கூடிய 3 பிரித்தானிய அவ்ரோ விமானங்களும் இப்போது தரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

"வை—12" ரக சிறிய விமானங்களே பலாலிக்கு அதுவும் மிகக்குறைந்த தடவைகள் சென்று வந்துள்ளன.

ஆகமொத்தத்தில் வான் பாதை இப்போது மூடப்பட்டுவிட்டது.

கடல்மார்க்கம் ஒன்றே இப்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

ஏனைய மார்க்கங்கள் என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிடுவது இதனைத்தான்.

கடல்மார்க்கம் கூட தென்மேல்பருவக்காற்று ஆரம்பித்த பின்னர் தடைப்பட்டுவிடலாம். (உ-14)

## தமிழ் நாட்டில்

# கைது உத்தரவு அமுலில் இருக்க இரகசியமாக நடமாடிய சுவாமி!

"ஜெயலலிதா ஆட்சியைக் கவிழ்த்த பின்னர் திருப்பதிக்கு போய் மொட்டை போட்டுக் கொள்வேன்."

—இவ்வாறு கூறினார் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி

சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

செய்தியாளர்மாநாடு ஒன்றில் சுப்பிரமணியம் சுவாமி சாதிப் பெயர் ஒன்றைக் குறிப்பிட்டு ஒரு சாதியினரை இழிவாகத் தாக்கிவிட்டார் என்ற குற்றச்சாட்டைக் காரணம் காட்டி அவரைக் கைது செய்ய நீதிமன்ற உத்தரவை கடந்தமாதம் 20 ஆம் திகதி தமிழக அரசு பெற்றுக் கொண்டது.

சென்னை மேல் நீதிமன்றத்தில் அச்சமயம் இருந்த சுப்பிரமணியம் சுவாமியை கைது செய்வதற்காக நீதிமன்ற வாசலில் காவல் இருந்தனர் பொலீஸார்.

ஆனால் தமது "வாய்வீச்சால்" பொலீஸாருக்கு சூடு கொடுத்து விட்டு அங்கிருந்து தப்பிச்சென்ற சுப்பிரமணியம் சுவாமி, உடனடியாக புதுடில்லிக்குப் பறந்து விட்டார்.

தமிழகம் திரும்பியதும் அவரைக்கைதுசெய்யலாம் என தமிழகப் பொலீஸ் காத்திருந்தது ஆனால் அதற்கிடையில புதுடில்லி உயர்நீதிமன்றத்தில் தம்மைக் கைது செய்வதைத் தடை செய்து நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக் கொண்டார் சுவாமி.

இந்த நிலையில் வேறுவழியில்லாத தமிழக அரசு—

"எந்தச் சாதியினரையும் புண்படுத்தும் நோக்கம் தமக்கு இல்லை —என சுப்பிரமணியம்சுவாமி பகிரங்கமாகப் பின்னர் அறிவித்ததைக் காரணம் காட்டி சுவாமி மீதான வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டது.

இதற்கிடையில்—

தாம் கைதாவதற்குப் பயந்து புதுடில்லிக்கு ஓடிய சுப்பிரமணியம் சுவாமி தமிழகப் பொலீஸாருக்குப் பயந்து தாம் புதுடில்லிக்கு ஓடவில்லை என்று வெளியே காட்டுவதற்காக கைது செய்வதற்கான உத்தரவு நடைமுறையில் இருக்கும் போது புதுடில்லியிருந்து தமிழகத்துக்கு "மாறு வேடத்தில்" வந்து மார்தட்டி திரும்பிச் சென்றிருக்கிறார்.

நரைத்த தலைமுடி "நஷனல்" சேர்ட், வேட்டி சகிதம் வழமையாகக் காணப்படும் சுப்பிரமணியம் சுவாமி சுடும் நீல நிற நீளக்கால் சட்டை, சந்தன நிற 'ரிஷேர்ட்', தலையில் பச்சை நிறத்தொப்பி, மூக்குக் கண்ணாடி, கறுத்த 'டை' பூசிய தலைமயிர் சகிதம் டெல்லியில் உள்ள தமது வீட்டிலிருந்து புறப்பட்டார். அவருடன் வழமையாக அவரது பாதுகாப்புக்கு வரும் மத்திய அரசின் பொலீஸார் ஒருவர் கூடக் காணப்படவில்லை. பாதுகாப்புக்காக "றோ" அமைப்பைச்சேர்ந்த ஒருவரை மட்டும் அவருடன் அனுப்பியிருந்தார் பிரமர் ராவ். அந்த அதிகாரி "சபாரி" உடையுடன் சுவாமியுடன் சேர்ந்து வந்தார்.

புதுடில்லி விமான நிலையத்துக்கு வந்த சுவாமியும் அந்த அதிகாரியும் சந்தடி செய்யாமல் தனியார் விமானம் ஒன்றில் ஏறிக்கொண்டனர்.

புதுடில்லி அரசியலில் சர்ச்சைக்குரிய சுவாமியாகக் கருதப்படும் சந்திராசாமியும் விமானத்தில் ஏறிக்கொண்டார்.

சரியாக இரவு 7 மணிக்கு கிளம்பிய விமானம் ஆந்திராவின் ஹைதராபாத் விமான நிலையத்தில் தரையிறங்கிய போது இரவு நேரம் 9 மணி

அங்கு சந்திராசாமி இறங்கிக் கொள்ள விமானம் பயணத்தைத் தொடர்ந்தது. கேரளாவில் உள்ள திருச்சூரில் வந்து இறங்கியது.

அங்கிருந்து இரகசியமாகத் தான் ஏற்பாடு செய்த சிலருடன் காரில் கிளம்பிய சுப்பிரமணியம் சுவாமி கோயம்புத்தூரை அடைந்த போது மணி இரவு 10 50

கோயம்புத்தூரில் உள்ள தமது கட்சி அலுவலகத்துக்கும், முன்னாள் எம். எல் ஏ ஒருவர் வீட்டுக்கும் அவர் சென்றார்.

அவரைக் கண்டதும் அங்கிருந்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். கைது உத்தரவுடன் தமிழகப் பொலீஸ் சுவாமியை எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்துப் பார்த்திருக்க, இரவில் பகிரங்கமாக சுவாமி நடமாடியதே அவர்களின் அதிர்ச்சிக்குக் காரணம்.

அந்த முன்னாள் எம். எல். ஏ. சுவாமியை நள்ளிரவு ஒரு மணிக்கு குளித்தலைக்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றுக்கு அழைத்துக் கொண்டு போனார்.

அங்கு தம்மை யார் என்று கூறிக் கொள்ளாமலேயே பல பொதுமக்களுடன் உரையாடினார் சுப்பிரமணியம் சுவாமி

"சார் அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிறார். பெயர் சீனிவாசன். இங்கு மில் ஆரம்பிக்கப் போகிறார். உங்களிடம் பேசுவதற்காக வந்திருக்கிறார்"— என இரவில் அங்கு வந்த பொதுமக்களிடம் சுப்பிரமணியம் சுவாமியை அறிமுகம் செய்து வைத்தார் அந்த எம் எல் ஏ.

சுப்பிரமணியம் சுவாமியை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது பற்றியும் அப்போது பிரஸ்தாபிக்கப்பட்டது.

"தாழ்த்தப்பட்டவர்களை சுவாமி கேவலமாகச் சொல்லி விட்டதாக ஜெயலலிதா அவரைக் கைது செய்யச் சொல்லியிருக்கிறாரே?"— என்று சுவாமியிடம் கேட்டனர்.

"அதெல்லாம் சும்மா... சுவாமியை ஜெயிலில் போடுவதற்காக இந்த ஏற்பாடு"— என்று பொதுமக்கள் பதிலளித்திருக்கின்றனர்.

தமிழக அரசின் கைது உத்தரவுக்கு மத்தியிலும் தமிழகத்தில் தம்மால் நடமாட முடியும் என்பதை முதல்வர் ஜெயலலிதாவுக்கு உறைக்க வைப்பதற்காக கோயம்புத்தூர் வந்து நடமாடிய சுப்பிரமணியம்சுவாமி விடியற்காலை 2மணிக்கு திண்டுக்கல் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தார்—

சுவாமியை முன்னர் திருச்சூரில் இறக்கிய தனியார் விமானம் அப்போது திண்டுக்கல்லில் காத்து நின்றது. அதில் ஏறி மீண்டும் புதுடில்லி பறந்தார் சுவாமி

மாநில அரசின் கெடுபிடிகள். அ. தி. மு. கவினரின் தாக்குதல் திட்டங்கள் ஆகியவற்றையும் மீறி நினைத்த போது— தன்னால் தமிழகத்தில் எங்கும்— நடமாட முடியும் என்பதை நிரூபிப்பதே சுவாமியின் 'மாறுவேட' (?) விஜயத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

தம்மைக் கைது செய்வதற்கான தடை உத்தரவை புதுடில்லி உயர்நீதிமன்றத்திலிருந்து பெற்றுக் கொண்ட சுவாமி. இரண்டொரு தினங்களில் பகிரங்கமாக தமிழகம் வந்து சேர்ந்தார்.

அதன் பின்னர் தமிழகத்தின் பிரபல வார இதழ் ஒன்றுக்கு தமது மறைமுக தமிழக விஜயம் குறித்து தகவல் வெளியிட்ட சுவாமி, தாம் இளமைத்துள்ளலுடன்— இருபது வயது குறைந்தவராக —முன்னர் காட்சியளித்த தோற்றத்துடன் அப்பத்திரிகையின் படப்பிடிப்பாளருக்கு "போஸ்" கொடுத்தார்.

அதன் பின்பு அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது செய்தியாளர்கள் 'என்ன ஹீரோமாதிரி இருக்கிறீர்கள்.. சினிமாவில் நடிக்கப் போகிறீர்களா?' [illegible] ... (4 ஆம் பக்கம் பார்க்க)

(4 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:
கவி

# ராணுவ தளத்தில் திடீரென புகுந்து டாங்கியை கடத்திய பலே ஆசாமி!

வாஷிங்டன், மே 20

இராணுவ படைத்தளம் ஒன்றுக்குள் புகுந்த நபர் ஒருவர், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இராணுவ யுத்த டாங்கியை (Battle Tank) கடத்திக் கொண்டு சென்றுள்ளார்.

இச்சம்பவம், நேற்று முன்தினம் அமெரிக்காவின், கலிபோர்னியா மாநிலத்தில் உள்ள இராணுவ படைத்தளத்தில் இடம்பெற்றது.

இராணுவ படைத் தளத்தினுள் பிரவேசித்த நபர் யுத்த டாங்கியினுள் ஏறி அமர்ந்து அதனை கலிபோர்னியா தெருக்களின் வழியாக சாதாரண கார் ஒன்றை செலுத்துவதுபோல் ஓட்டிச் சென்றார்.

சாதாரணமாக யுத்த டாங்கிகள் வீதிகளில் செலுத்தப்படுவதில்லை ட்றக்கில் ஏற்றிச் சென்று யுத்த முனையில் இறக்கியே பயன்படுத்துவர்கள்

இது பற்றிய செய்தி கலிபோர்னிய மாநில தொலைக்காட்சி நிறுவனத்தினருக்கு கிடைத்ததும் அவர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் டாங்கியை பின் தொடர்ந்து அதனை படமாக்கினர்.

அதனை அப்படியே பி. பி. ஸி மற்றும் அமெரிக்க தொலைக்காட்சிகள் ஒளிபரப்பின.

டாங்கி ஓடிக் கொண்டிருப்பதையும். அதனைக் கலைத்துக் கொண்டு பொலீஸ் காரர்கள் பின்னால் ஓடிக் கொண்டிருப்பதையும் காண முடிந்தது

இறுதியில் டாங்கியை பொலீஸ்காரர் ஒருவர் மடக்கிப் பிடித்து அதனை ஓட்டிச் சென்றவரையும் சுட்டுக்கொன்றார்.

இந்தக் காட்சிகளை பல லட்சக்கணக்கான மக்கள் தொலைக்காட்சியில் திகில் திரைப்படம் ஒன்றைப் பார்ப்பது போல் கண்டு களித்தார்கள் (ஓ-5)

வெளியார் ஊடுருவலைத் தடுப்பதற்கு

# மலையகத் தோட்டங்களில் பொலீஸ் காவல் நிலைகள்!

கொழும்பு, மே 20

மலையக தோட்டப் பகுதிகளில் பொலீஸ் காவல் நிலைகளும், விழிப்புக் குழுக்களும் அமைக்கப்பட உள்ளன; இப்பகுதிகளில் வெளியார் ஊடுருவதைத் தடுப்பதற்கே இந்நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சப்ரகமுவ பிரதி பொலீஸ்மா அதிபர் கடந்த செவ்வாய்க்கிழமை தனது அலுவலகத்தில் தோட்ட நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து மாநாடு ஒன்றை நடத்தினார்

ஆனால் இக் கூட்டத்திற்கு தொழிற்சங்க பிரதிநிதிகள் எவரும் அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மலையகத் தோட்டப் பகுதிகளில் பொலீஸ் காவல் நிலைகளையும், விழிப்புக் குழுக்களையும் அமைப்பது தொடர்பாக இக் கூட்டத்தில் விளக்கப்பட்டது.

இது தொடர்பான நடவடிக்கைகள் முதலில் சப்ரகமுவ மாகாணத்தில் மேற்கொள்ளப்பட உள்ளன

பின்னர் மலையகத்தின் ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

எண்ணிக்கையில் கூடுதலாக உள்ள தோட்டங்களை இணைத்து, பொருத்தமான ஓர் இடத்தில் பொலீஸ் காவல் நிலைகளை அமைப்பது என்றும் —

தோட்டங்கள் தோறும் தோட்டக் கமிட்டி தலைவர்கள், தோட்ட சேவையாளர்கள் அடங்கிய விழிப்புக் குழுக்களை அமைப்பது என்றும் இம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

விழிப்புக் குழுக்களில் தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள பொலீஸ் காவல் நிலைகளைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரியும் இடம்பெறுவார்.

இதன்படி தோட்டத்திற்கு புதிதாக எவராவது சென்றால் அவர் பற்றிய விவரங்கள் தோட்ட நிர்வாகிக்கு அறிவிக்கப்பட வேண்டும். அவர் அதனை விழிப்புக் குழுவுக்கு அறிவிப்பார்.

இவர்கள் அனுமதித்தால் மட்டுமே புதிதாக வந்தவர் அந்த தோட்டத்தில் தங்க முடியும். [ஓ-5]

அனுமதி பெறப்படாமல்

## விறகு ஏற்றி வந்த 'லான்ட்மாஸ்டர்'கள் சிக்கின!

தென்மராட்சி, மே 20

அனுமதியின்றி காட்டு விறகை ஏற்றிக் கொண்டு வந்த மூன்று 'லான்ட் மாஸ்டர்' வாகனங்களை இரவு ரோந்து சேவைக்குச் சென்ற சாவகச்சேரி காவல் துறையினர் கைப்பற்றியுள்ளனர்.

தென்னம் மட்டை ஏற்றி வந்த "லான்ட் மாஸ்டர்" வாகனங்களை காவல் துறையினர் சோதனையிட்ட போது அனுமதி பெறப்படாத விறகு ஏற்றி வந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதே வேளை—

சட்டவிரோதமாக விறகு வெட்டிக் கட்டிக் கொண்டு வந்த சுமார் 15 சைக்கிள் விறகு வியாபாரிகளை நாவற்குழி காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இவர்கள் தொடர்பான விசாரணைகளை நாவற்குழி காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். (ஓ-117-173)

புல்மோட்டையைச் சேர்ந்த

## 2 ஆயிரம் குடும்பங்கள் பொது இடங்களில் தஞ்சம்

கொழும்பு, மே 20

அரசு— விடுதலைப்புலிகள் மோதல் வெடித்ததை அடுத்து புல்மோட்டைப் பகுதியைச் சேர்ந்த இரண்டாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து வணக்கஸ்தலங்களிலும் பொது இடங்களிலும தஞ்சம் புகுந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இந்த அகதிகளுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழங்கும் நடவடிக்கையை அநுராதபுரம் மாவட்ட செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

புல்மோட்டைப்பகுதி திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கு கீழ் வருகின்ற போதிலும்—

திருகோணமலை— குச்சவெளி வீதியூடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருப்பதால் அப்பாதையூடாக பொருள்களை அனுப்ப முடியாத நிலையில் திருகோணமலைச் செயலகம் இருப்பதாகவும்—

அதனால் அந்தப்பணியை அநுராதபுரம் செயலகம் மேற்கொண்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ)

பிறப்புப் பதிவு விண்ணப்பத்தை

## சிங்களத்தில் நிரப்புமாறு படிவத்தில் அறிவுறுத்தல்

கொழும்பு மே 20

கொழும்பு. மாளிகாவத்தை பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் வழங்கப்படும் பிறப்பு பதிவிற்குரிய விண்ணப்பப்படிவம். தனிச் சிங்களத்தில் மட்டுமே நிரப்பப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

இந்த விண்ணப்பப்படிவத்தின் மேல் பகுதியிலேயே. "இப்பத்திரத்தை சிங்களத்தில் மட்டுமே நிரப்புங்கள்" என சிங்களத்தில் மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது

சிங்களம் தெரியாத பலர் ஏற்கனவே இப்படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பிக் கொடுத்து விட்டார்கள்.

தற்போது என்ன செய்வது என்று தெரியாமல், தமது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு விடுமோ என்று அவர்கள் கவலை கொண்டுள்ளனர்

இது பற்றி தெரிந்து கொண்ட ஏனையோர் படிவத்தை நிரப்ப சிங்கள மொழி தெரிந்தவர்களை நாடியுள்ளனர். [ஓ-5]

★ இலங்கையில்

## வருடாந்தம் 30 ஆயிரம் பேருக்கு புற்றுநோய்!

கொழும்பு, மே. 20

இலங்கையில் ஒவ்வொரு வருடமும் 18 ஆயிரம் முதல் 30 ஆயிரம் பேர் புதிதாக புற்றுநோயின் தாக்கத்திற்கு ஆளாகி வருகின்றனர் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 5 ஆயிரம் பேர் வரையிலேயே அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.

நோய்ப்பாதிப்புக்கு ஆளானோரில் 80 சதவீதமானோர் சிகிச்சைபெறாமலோ அல்லது காலம் தாழ்த்தி சிகிச்சை பெறுவதாலோ மரணமடைகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-14]

## தென்பகுதியில் பொருள்களின் விலை உயர்வு

கொழும்பு, மே 20

தென்னிலங்கையில் அரிசி,மரக்கறி வகைகள், கிழங்கு, பெரிய வெங்காயம் ஆகியவை உட்பட பல்வேறு அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கணிசமாக அதிகரித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## புலிகளின் குரல் வானொலியில்

20 — 05 — 1995

சனி இரவு

- ★ 8-02— புரட்சிக் குரல்
- ★ 8-05— நிகழ்வும் பகிர்வும்
- ★ 8-20 – நேயர் கடிதங்கள்
- ★ 8-30— செய்திகள்
- ★ 8-40— கவிப்போர் "சுதந்திரமா, சுகவாழ்வா?"

21 — 05 — 1995

ஞாயிறு காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 – களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40— களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

சனி மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 – வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30— அறிவியல் வினாடி வினா
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02— பாமாலை
- ★ 6-15 — என் தெரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## அரசின் வேடமும் இயலாமையும்

இனப்பிரச்சினைக்கான அரசாங்கத்தின் உத்தேச தீர்வுத் திட்டம் இன்னும் ஒரு மாதத்திற்குள் எல்லா அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்படும் என்று அரசமைப்பு விவகாரம், மற்றும் நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

இதற்கு முன்னர் —

இனப்பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டத்தை இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடுவதாக, கடந்த புதன்கிழமை தம்மைச் சந்தித்த ஐந்து தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி சந்திரிகா கூறினார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து பத்து மாதங்கள் நிறைவடைந்து விட்டன. இன்னமும் அரசின் தீர்வுத் திட்டம் என்னவென்று வெளியிடப்படவில்லை. அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களுக்காவது அந்த விவரம் தெரியுமா என்பது சந்தேகமே!

தீர்வுத் திட்டம் பகிரங்கமானதன் பின்னரே, அரசாங்கம் இது விடயத்தில் எங்கே நிற்கிறது என்பதனைத் திட்டவட்டமாகக் கூற முடியும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை தயாரித்து விட்டதாகவும், அது குறித்து தமிழ்க் கட்சிகளுடன் கலந்தாலோசனை நடத்துவதாகவும் காட்ட வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளைத் தவிர்த்து சமாதானத் தீர்வு ஒன்றை அரசாங்கத்தினால் கொண்டு வர முடியும்; அரசியல் தீர்விலேயே அரசுக்கு நாட்டம் உண்டு; என்று வெளி உலகத்துக்கு காட்டுவதற்காக அரசாங்கம் ஏனைய தமிழ் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது. அதே வேளை இது தமிழர்களை பிரித்தாளும் ஒரு தந்திரமாகவும் அமைகிறது.

விடுதலைப் புலிகளை ஓரங்கட்டி விட்டு, ஏனைய தமிழ் அமைப்புகளுடன் பேசி ஒரு தீர்வைக் கொண்டு வர முடியாது என்பது கடந்த கால அனுபவம். ஜே ஆர் ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோர் இந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்து தோல்வி கண்டார்கள் என்பதும் தெரிந்த விடயம். இவற்றை மனதில் கொண்டே சந்திரிகா தாம் பதவிக்கு வந்ததும் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முன்வந்தார்.

தமது சமாதான முயற்சியைச் சரிவரக் கையாண்டு முன்னெடுத்துச் செல்ல முடியாமல் ''போட்டு அடித்த'' பின்னர், பைத்தியத்தனமானவர்கள் என்று தாம் கண்டித்த அதே ஜே ஆர், பிரேமதாசாவின் அணுகுமுறையையே தாமும் பின்பற்ற சந்திரிகா முனைவது முற்றிலும் முட்டாள்தனமாகும்.

பத்து மாதங்களுக்கு முன்னர் சாத்தியமற்றதாகக் கருதிய ஒரு வழிமுறை, விடுதலைப் புலிகள் பலமாக இருந்த தனிநிலைமையில் மாற்றம் இல்லாத போது இப்போது எவ்வாறு சாத்தியமாகும்?

போரில் வெற்றி பெற்ற பின்னர் இலங்கையர்கள் அனைவருக்கும் நியாயமான அரசியல் தீர்வை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்திருப்பது போருக்குப் பின்னரே உண்மையான தீர்வு கொண்டு வரப்படும் என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது.

அவ்வாறாயின், இப்போது தமிழ் அமைப்புக்களுடன் தொடங்கப்பட்டுள்ள பேச்சுக்கள் மூலம் தற்காலிகத் தீர்வைக் கொண்டு வரத்திட்டமிடப்பட்டுள்ளதா?

மொத்தத்தில், அரசாங்கம் இனப்பிரச்சினை விவகாரத்தில் என்ன செய்வது என்று தெரியாது குழம்பிப் போயுள்ளது. அதனால் முன்னுக்குப் பின் முரணான தகவல்களையும், கருத்துக்களையும் சொல்லி மக்களையும் குழப்புகிறது.

அரசாங்கம் சமாதான வேடம் போடத் தொடங்கியதன் விளைவு இது. இயலாமையின் பிரதிபலிப்பு என்றும் கொள்ளலாம்.

# அரச தரப்பு நாடாளுமன்றக் குழு 3 மாதங்களாக கூட்டப்படாதது ஏன்?

## ஜனாதிபதியிடம் அதிருப்திக் குழு எம். பிக்கள் கேள்வி

கொழும்பு, மே. 20

மிக நெருக்கடியான வேளையை நாடு எதிர்நோக்கியிருக்கும் இந்தக் காலகட்டத்தில்—

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் எதனையும் கடந்த மூன்று மாதங்களாக ஜனாதிபதி கூட்டாமல் இருப்பது ஏன்?

—இவ்வாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் உள்ள அதிருப்திக் குழு எம். பிக்கள் பலர் ஜனாதிபதியிடம் நேரடியாகக் கேட்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுத் தரப்பில் உள்ள இந்த அதிருப்திக் குழுவின் எம். பிக்கள் நாற்பது பேர் கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றக் கட்டடத்தில் கூடி நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தனர்.

அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட முக்கிய கருத்துக்களும் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் வருமாறு:-

பயங்கரவாதத்தை அடியோடு ஒழிக்க நடவடிக்கை எடுக்கும் அதேவேளை கடந்த காலத்தில் விட்ட தவறுகளை மீண்டும் விடாமல் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் அரசு வெல்வதை உறுதி செய்ய வேண்டும். —

முப்படைத் தளபதிகளையும், பொலிஸ்மா அதிபரையும் அரச தரப்பு எம். பிக்கள் நேரடியாகச் சந்தித்து அவர்களின் பிரச்சினையை நேரில் கேட்டறிய வேண்டும்; படையினரின் மனோதிடத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்,

இராணுவ விடயத்தில் அரசை தவறாக வழிநடத்தும் உயரதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அரச தரப்பு எம்பிக்களின் கூட்டத்துக்கு ஜனாதிபதி வராமல் விடுவது ஆட்சேபத்துக்குரியது.

தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் எமது தரப்புக் கருத்தை ஜனாதிபதிக்குத் தெரிவிக்க நாம் விரும்புவதால், எம்மைச் சந்திக்க நேரம் ஒதுக்கித் தரும்படி ஜனாதிபதியைக் கோர வேண்டும்.

—இவ்வாறு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி 40 எம். பிக்களினதும் கருத்தை வெளிப்படுத்தும் கடிதம் கடந்த புதனன்று ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ]

## ஆசிரியர் சேவைக் கால பயிற்சி வகுப்பு

பருத்தித்துறை, மே 20

ஆண்டு 3க்கு கல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கான, புதிய பாடத்திட்ட சேவைக் காலப் பயிற்சி வகுப்புகள், யாழ். மாவட்டத்தின் சகல கோட்டங்களிலும் நடைபெறவுள்ளன.

இதற்கமைய பருத்தித்துறை கல்விக் கோட்ட ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு நாள் ஒன்றுக்கு 100 ரூபா வீதம் கொடுப்பனவும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5-118)

## தைக்கப்பட்ட சீருடைகள்

தென்மராட்சி, மே 20

தமிழர் புனர்வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினரால் பராமரிக்கப்பட்டு வரும் பாலர் பாடசாலைச் சிறார்களுக்கு தைக்கப்பட்ட இலவச சீருடைகள் வழங்கப்படவுள்ளன. [ஓ-117]

## சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, மே 20

ஏறாவூரில் ரெலோ உறுப்பினர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஏறாவூர் பொலிஸ் நிலைய சோதனைச் சாவடிக்கு மிக அண்மையில் உள்ள, பிள்ளையார் கோவிலுக்கு அருகிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

இவர் தனது நண்பர்களுடன் நின்று உரையாடிக் கொண்டிருந்தபோது, இளைஞர்கள் சிலர் இவரை சுட்டு விட்டு தப்பி ஓடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

## தமிழ் மொழி கலைத்திறன் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 20

யாழ். கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு கிடையிலான தமிழ்மொழி. கலைத்திறன் போட்டிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 30மணி முதல், யாழ். கன்னியர்மடம் மகா. வித்தியாலயத்தில், கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும். (ஓ 5)

## நிதி அமைச்சின் செயலர் மறுப்பு

கொழும்பு, மே 20

அரசாங்கம் ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஸ்ரீலங்கா ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றைத் தனியார்மயமாக்க உள்ளது என்ற பத்திரிகைச் செய்திகளை நிதி அமைச்சின் செயலாளர் திரு ஏ. எஸ். ஜயவர்த்தனா மறுத்துரைத்தார்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு உதவி வழங்கும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் இத்தகைய தனியார்மயமாக்கங்களில் அக்கறை உடையவை அல்ல என்று அவர் கூறினார். [ஓ-ச]

## மரணிக்கும் வரை சேவை என்கிறார் பாப்பரசர்

வத்திக்கான், மே 20

மரணிக்கும் வரை மக்களுக்காக சேவை செய்யப்போவதாக பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் தமது 75 ஆவது பிறந்த நாளை கொண்டாடிய பாப்பரசர் வத்திக்கானில் இதனைத் தெரிவித்தார்.

இளைப்பாற வேண்டும் என்ற ஆலோசனையை நிராகரித்துள்ள அவர் ஆண்டவன் ஒருவனால்தான் அதனைச் சாதிக்கமுடியும் என்று தெரிவித்தார். (ஐ)

## மட்டு. - கொழும்பு வீதியில் புதிய சோதனைச் சாவடி

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்பு மாவட்டம் வாகலேரி மீயாங்குளம் இராணுவ முகாமுக்கு அருகில் கொழும்பு வீதியில், படையினர் சோதனைச் சாவடி ஒன்றை புதிதாக நிறுவியுள்ளனர்.

ஓட்டமாவடி ஊடாக கொழும்பு, வாகனேரி நோக்கிச் செல்லும் வாகனங்கள் இந்தச் சோதனை முகாமில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்படுகின்றன.

சைக்கிளில் செல்பவர்கள் பலத்த சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். முகாம் எல்லை தாண்டும் வரை நடந்து செல்லுமாறும் மக்கள் பணிக்கப்படுகின்றனர். [ஓ-14]

### கொழும்பு மேல் நீதிமன்றம்

## போதைவஸ்து விற்றவருக்கு மரண தண்டனை தீர்ப்பு

கொழும்பு, மே 20

போதை வஸ்து வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகக் காணப்பட்ட மொகமட் காஸிம் என்ற நபருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கியது.

இதே வழக்கில் மற்றும் இரண்டு குற்றச்சாட்டுகளில் குற்றவாளிகளாகக்காணப்பட்டரெய்ஸாக்மொகமட்லிவாஹிர் ஜுமைல் மொகமட் ஆகியோருக்கு தலா பன்னிரண்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பு மேல்நீதிமன்றநீதிபதி எவ்.என்.டி.ஜெகுரியா அண்மையில் இத்தீர்ப்பை வழங்கினார். [உ]

### தாக்குதல் ஆபத்து உள்ள

## எல்லைப்புற முகாம்களுக்கு நீர் மின்சாரம் வழங்குக!

### நாடாளுமன்றில் அ'புர எம். பி

கொழும்பு, மே 20

தாக்குதலுக்கு உள்ளாகக் கூடும் எந்த நிலையில் உள்ள— எல்லைகளில் உள்ள— இராணுவ முகாம்களுக்கு நீர்மின்சாரம் வழங்கப்பட வேண்டும்.

இந்த முகாம்களுக்கு ஜெனரேற்றர்கள் மூலமே இப்போது மின்சாரம் வழங்கப்படுகின்றது.

இவை இயங்கிக் கொண்டிருக்கும் போது ஏற்படும் சத்தத்தினால் முகாம்களுக்கு வெளியே இடம்பெறும் எந்த ஓர் எச்சரிக்கையான நிகழ்வுகளையும் இராணுவத்தினரால் கிரகிக்கவோ கேட்கவோ முடியாமல் உள்ளது.

அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திஸநாயக்க இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் கேட்டுக் கொண்டார். (ஓ-14)

# இன்றைய நிலையை அரசு கையாளும் முறைக்கு சர்வதேச சமூகம் ஆதரவு

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

தற்போதைய நிலைமையை அரசு கையாளும் முறை குறித்து பூரண நம்பிக்கை கொண்டுள்ள சர்வதேச சமூகம் தனது முழு ஆதரவை அரசுக்கு தெரிவித்துள்ளது.

வாராந்த அமைச்சரவைக் கூட்டம் பற்றி நீதி அரசியல் விவகார அமைச்சர் ஜி எல். பீரிஸ், நேற்று முன்தினம் விளக்கி கூறும் போது இவ்வாறு தெரிவித்தார்.

அரசின் சமாதான முயற்சிகள் நேர்மையானவையும், விசுவாசமானவையும் என்பதை வெளிநாட்டு அரசாங்கங்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்டு அரசு இயன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

விடுதலைப் புலிகள், சமாதான யோசனைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளாது, பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டு [illegible] திற்கு திரும்பி [illegible] என்று அவர் கண்டித்தார்.

ஆயுதப் படையினர் இந்த நிலைமைகளுக்கு எதிராக தேசப்பற்றுடன் செயற்பட்டு வருகிறார்கள் இலங்கை அரசாங்கத்துக்கு படையினர் மீது முழு நம்பிக்கை உண்டு.

இது நாட்டின் எந்த ஒரு பகுதிக்கோ, சமூகத்துக்கோ எதிரான யுத்தம் அல்ல— என்றார்.

புதன்கிழமை, தமிழ் அரசியல் கட்சிகளோடு நடைபெற்ற கூட்டம் ஒன்றுடன் [illegible] துவங்கி விட்டது— என்றும் [illegible] குறிப்பிட்டார். (ஓ-5)

## இன்று

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் புதிய பணிப்பாளர் சபைதெரிவும் ஆறாவது வருடாந்த பொதுக் கூட்டமும்இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெறும். (ஓ-4)

## விவசாயிகள் ஒய்வூதியம்

யாழ். மாவட்ட ஒய்வூதியம் பெறும் விவசாயிகளுக்கான வைகாசிமாத ஒய்வூதியக் கொடுப்பனவுகள் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கமத்தொழில் காப்புறுதிச்சபை மாவட்ட காரியாலயத்தில் வழங்கப்படும். என கமத்தொழில் காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## சாவகச்சேரியில் விமான சிதைவுகள்

சாவகச்சேரி, மே 20

புலிகளால் அழிக்கப்பட்ட விமானத்தின் சிதைந்த பாகங்கள் சாவகச்சேரி நகரில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

## சாரணர் தலைவர்களுக்கு

யாழ்ப்பாணம், மே 20

சாரணர் தலைவர்களுக்கான அறிமுகப் பயிற்சி அவத்தை-1, வகுப்புகள் இன்றும் நாளையும் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் காலை8மணி தொடக்கம் மாலை6மணி வரை நடைபெறும். (ஓ-5-117-31)

### வென்னப்புவவில் பணிபுரியும்

## ஓட்டுத் தொழிற்சாலை தமிழர்கள் 8 பேர் கைது!

நீர்கொழும்பு, மே 20

ஓட்டுத் தொழிற்சாலைகளில் தொழிலாளராக வேலை செய்ய பல்வேறு இடங்களில் இருந்து வென்னப்புவவுக்கு வந்திருந்த 8 தமிழர்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கடந்த 8 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மாறவில்ல நீதிவான் சரத் தாபிறு உத்தரவிட்டுள்ளார். (ஓ-ச)

## ஏ. எஸ். பியின் வீட்டில் நகைகள், பணம் சூறை!

### றிவோல்வரும் பறிபோனது!!

கொழும்பு, மே 20

கொழும்பு குற்றத் தடுப்புப் பொலீஸ் திணைக்களத்தில் பணியாற்றும் உதவிப் பொலீஸ் அத்தியட்சகரின் வீட்டிற்குள் வெசாக் தினத்தன்று நுழைந்த கொள்ளையர்கள் நகைகள், ஒரு லட்சத்து அறுபதினாயிரம் ரூபா பணம், கடமையின் பொருட்டு அவருக்கு வழங்கியிருந்த றிவோல்வர் ஆகியனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கம்பஹா பகுதியில் உள்ள அவரது வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட சமயம் அவர் குடும்பத்தினருடன் வெசாக் நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கச் சென்றிருந்தார். (ஓ-10)

## கிளிநொச்சி அம்புலன்ஸ் வவுனியாவில்தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், மே. 20

கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வவுனியாவில் இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர்.

கடந்த ஒரு வாரகாலமாக எதுவித காரணங்களும் தெரிவிக்கப்படாமல் இந்த அன்புலன்ஸை இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர்.

இதனால் அவசர நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது.

இதே சமயம், இந்த வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த பிரெஞ் வைத்தியக் குழு திடீரென கடந்த வாரம் கொழும்பு சென்று விட்டது தெரிந்ததே. (ஓ-5)

# பேச்சில் அக்கறையுடன் அரசு ஈடுபடவில்லை

## நாடாளுமன்றத்தில் ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 20

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் அக்கறையோடு ஈடுபடவில்லை என கடந்த வாரம் அவசர காலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் உரை நிகழ்த்திய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார்.

விடுதலைப் புலிகள் சுமத்தியுள்ள இரண்டு குற்றச்சாட்டுகளுக்கு அரசு பதிலளித்தாக வேண்டும். இல்லையாயின் இலங்கையின் நிலைப்பாட்டுக்கு சர்வதேச ரீதியிலான அங்கீகாரம் கிடையாமல் போய்விடும்.

சமாதானத் தூதுக்குழுவில் அங்கம் வகித்தவர்களை அனுபவம் வாய்ந்த ஒரு தூதுக்குழுவென எந்தவகையிலும் நாம் கூட ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

காலத்துக்குக் காலம் அங்கத்தவர்கள் மாற்றப்பட்டார்கள்.

அணுகுமுறை சம்பந்தமாகவும் புனருத்தாரணம் சம்பந்தமாகவும் முட்டுக்கட்டை ஏற்பட்டது. புனருத்தாரணத்துக்கு 4 ஆயிரம் கோடி ரூபாவைச் செலவிட அரசு வாக்குறுதி அளித்தது.

ஆனால் வரவு செலவுத் திட்டத்தில் அதற்கென ஒரு சதம்கூட ஒதுக்கப்படவில்லை.

அரசாங்கம் ஒருபோதும் விடுதலைப் புலிகளை நம்பவில்லை என்பதும் விடுதலைப் புலிகள் தமது நிலையை ஒருபோதும் மாற்றிக்கொள்ள மாட்டார்கள் என்றும் இப்போது கூறப்படுகின்றது.

அப்படியாயின் விடுதலைப் புலிகள் இரண்டு காலக்கெடுக்களை தந்திருந்த போதிலும் ஏப்ரல் 19ஆம் திகதி ஏற்பட்ட சம்பவத்தை நாம் ஏன் எதிர்கொள்ள முடியாமல் போயிற்று.

1986 ஆம் ஆண்டு எந்தக் குழுக்களிடமும் ஏவுகணைகள் இருக்கவில்லை 1987ஆம் ஆண்டில்தான் அப்போதைய இந்தியப் பிரதமர் ''நீங்கள் அனைவரும் சமாதானத்துக்கு உடன்படாவிட்டால் சில குழுக்களுக்கு ஏவுகணைகளை வழங்குவதற்கு நான் முன்வருவேன்'' எனக் கூறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு அரசுகள் புலிகளைக் கண்டித்துள்ளதாக கூறப்படுகின்றது.

சில வெளிநாடுகளிலிருந்து கண்டனங்களை பெற்றுக் கொள்வதற்காக நாம் எமது இரத்தத்தை சிந்தவேண்டியுள்ளது.

உயர்மட்ட பாதுகாப்புக் குழு ஒன்று 29ஆம் திகதி பலாலிக்கு செல்வதாக லேக் ஹவுஸ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

இந்தப் பத்திரிகை முதல் நாளே அச்சிடப்படுகின்றது. இந்தத் தகவல் புலிகளின் புலனாய்வுக் குழுவுக்கு முன்னரே தெரியமுடியும்.

இராணுவ இரகசியங்களை லேக் ஹவுஸ் பத்திரிகைகள் வெளியே கொண்டு செல்கின்றன.

நாம் பலமுறை யாழ்ப்பாணம் சென்றுள்ளோம். ஆனால் அவை இரகசியமாக பேணப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார். [ஓ-14]

## ஓவியக் காட்சி

யாழ்ப்பாணம், மே. 20

மூத்த ஓவியர்களின் ஓவியக் காட்சி ஒன்று இன்று சனிக்கிழமை தொடக்கம் 3 நாள்களுக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியல் மண்டபத்தில் நடைபெறும்.

எஸ். ஆர். கே. இராசையா, க. கனகசபாபதி, மு. கனகசபை, க. இராசஇரத்தினம் ஆகிய ஓவியர்களின் ஓவியங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (ஓ-14)

### கம்பளை நகருக்கு வரும்

## தமிழ் இளைஞரை மிரட்டும் நடைபாதை வியாபாரிகள்!

கொழும்பு, மே. 20

மலையகத்தில் இருந்து கம்பளை நகருக்கு வரும் இளைஞர், யுவதிகளை மிரட்டி, விரட்டும் நடவடிக்கைகளில் அப்பகுதி சிங்கள நடை பாதை வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 13 ஆம் திகதி கம்பளைக்குச் சென்ற மலையக தோட்ட இளைஞர், யுவதிகளை நடைபாதை வியாபாரிகள் சிலர், அடையாள அட்டை இருக்கிறதா, எந்தத் தோட்டம், ஏன் இங்கு வந்தீர்கள் என்று கேள்வி மேல் கேள்வி கேட்டு விரட்டியடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாரின் திடீர் சுற்றிவளைப்பு சோதனைகள் ஒருபுறம், இது போன்ற மிரட்டல் நடவடிக்கைகள் மறுபுறம் என தோட்டத் தொழிலாளர்கள் கதிகலங்கிப்போய் உள்ளனர். (ஓ-5)

## தொழிலாளர் சாசனம்; தொழிலதிபர்கள் எதிர்ப்பு

கொழும்பு, மே 20

தற்பொழுது பிரேரிக்கப்பட்டுள்ள தேசிய தொழிலாளர் சாசனத்தின் சில சரத்துகளை ஓட்டி பல தனியார் துறைத் தொழில் அதிபர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

சகல தொழிற்சங்கங்களையும் அங்கீகரித்தல், ஒரு கொம்பெனியில் முதலாளிக்கும், தொழிற்சங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட கூட்டு ஒப்பந்தத்தை அதே தொழிலைச் சார்ந்த சகல தொழிலாளர்களுக்கும் உரியதாக்குதல் முதலிய சரத்துகள் முதலாளிமாரின் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளன.

ஆனால், தொழில் அமைச்சர் மகிந்த ராஜபக்ஸவால் தயாரிக்கப்பட்ட இந்த தொழிலாளர் சாசனம் அமைச்சரவைக்கு விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு, முதலீட்டாளர், தொழிலாளர் இரு பகுதியினரதும் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் திருத்தங்கள் செய்யப்படும் என்று அதிகாரபூர்வ வட்டாரங்களிலிருந்து அறியவருகின்றது. (ஓ-ச)

## வங்கியாளர் பரீட்சை

இலங்கை வங்கியாளர் நிலையம் நடத்தும் இடைநிலை மற்றும் இறுதிப் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் 4 ஆம் 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் மற்றும் ஆவணங்கள் ''கோமாரி'' கப்பல் மூலம் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. (ஓ-4)

## அரசமைப்பு அத்தியாயங்கள். வெளியாகும்

கொழும்பு, மே 20

அரசாங்கம் புதிய அரசமைப்பு சட்டத்தின் (நான்கு) அத்தியாயங்களை அடுத்த சில நாட்களில் தொடர்பு சாதனங்களில் வெளியிடும்.

நீதி. அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான ஜி. எல் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார். [ஓ-ச]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் மாவட்ட ரீதியான தாச்சி சுற்றுப் போட்டி மூன்றாம் இடத்தை தெரிவு செய்வதற்கான போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெறும். மயிலணி வளர்பிறை வி. கழகமும், இணுவில் கலாஜோதி வி. கழகமும் அதில் பங்கு பற்றும்.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில் மயிலிட்டி ஒற்றுமை வி.க அணியும் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் வி.க அணியும் பங்கு பற்றும். (ஐ)

## கிரிக்கெட் ஆட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் வருடாந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் இன்று ஆரம்பமாக இருந்த சில ஆட்டங்கள் ஒத்திவைக்கப் பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

★ கொக்குவில் இந்து எதிர் ஹாட்லி கல்லூரி [15 வயது பிரிவு] — இந்தப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமையும் —

★ ஹாட்லி கல்லூரி எதிர் கொக்குவில் இந்து [17 வயது பிரிவு] — இந்த ஆட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமையும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ சுன்னாகம் ஸ்கந்தவரோதயா எதிர் மகாஜனா [17 வயது பிரிவு] — இந்த ஆட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 30 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

★ யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான [17 வயது பிரிவு] ஆட்டம் திகதி குறிப்பிடாது ஒத்தி வைக்கப் பட்டுள்ளது.

★ யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டம் [15 வயது பிரிவு] ரத்துச் செய்யப்பட்டுள்ளது. [ஐ-20]

## திருமலை கடற்பரப்பில் 7 வேங்கைகள் வீரச்சாவு

கொழும்பு, மே. 20

திருமலை கடற்பரப்பில் கடந்த 16 ஆம் திகதி படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் 7 பேர் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த வேங்கைகளின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:-

★ கப்டன் சிவரஞ்சன் அல்லது சிவா (திருச்செல்வம் சிவநாதன்)

★ வீரவேங்கை ஜெகன்

★ வீரவேங்கை கவிவாணன்

★ வீரவேங்கை தமிழரசன்

★ வீரவேங்கை பிரணவன்

★ வீரவேங்கை கதிரவன் (இராசலிங்கம் அழகுராசா — திருமலை)

★ வீரவேங்கை தமிழ்வண்ணன் [சந்திரசேகரம் தெய்வேந்திரன். [ஐ-7]

## மாணவர் தமது நிலையை அறிவித்த பின்னரே முடிவு

### மருத்துவபீட சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 20

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் தமது நடவடிக்கைகள் குறித்து தமக்குள் சில முடிவுகளை எடுத்து அறிவித்த பின்னரே —

மீண்டும் விரிவுரைகளை ஆரம்பிப்பது குறித்து ஏனைய நடவடிக்கைகள் குறித்தும். —

முடிவு செய்வதென நேற்றுக் கூடிய மருத்துவ பீடச் சபை தீர்மானித்தது.

யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடச் சபையின் கூட்டம் நேற்று பி. ப 2-30 மணிக்கு பீடாதிபதி பேராசியர் எஸ் வி பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது

மருத்துவ பீட மாணவர்கள் பீடத்தை பூட்டி விரிவுரையாளர்களை வெளியேவிட்ட சம்பவம் அதனைத் தொடர்ந்து அவர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் ஏனைய பீட மாணவர்களும் அவர்களுக்கு ஆதரவாக போராடியமை என்பன குறித்து நேற்றைய கூட்டத்தில் நீண்டநேரம் மீளாய்வு செய்யப்பட்டது. (அ-7)

நான்கு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு ரகத் துப்பாக்கி 1-ரி 56 ஒன்று ரகத் துப்பாக்கி இரண்டு —ரி 56 ரவைக் கூடுகள் மூன்று நடுத்தர ரவைகள் என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (இ-3-7)

இலங்கையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குலைப்பதன் மூலம் 'சார்க்' நாடுகள் மத்தியில் இந்தியாவின் ஆந்தஸ்தை குறைக்கவும் பாகிஸ்தான் முயற்சி செய்யக் கூடும்.

அண்மையில் இலங்கையில் இரு விமானங்களை சுட்டு வீழ்த்தியதற்கு பயன்படுத்தப் பட்டதாகக் கருதப்படும் "ஸ்ரின்ஜர்" ஏவுகணைகள் அமெரிக்காவினால் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களின் ஒரு பகுதி என்று விசயமறிந்த உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

— இவ்வாறு 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ)

காங்கிரஸ்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரிவேயாளர்கள் தங்கள் யூகத்தை வெளியிட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களும், அதிருப்தியாளர்களும் இவ்விடயத்தில் சோனியா சாந்தியை தலையிடுமாறு தனித்தனியாகக் கேட்டுள்ளனர். (இ 3)

## இன்றும் நாளையும் தீ - சுமந்தோர்

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினரின் தீ - சுமந்தோர் நாடகம் இன்றும் — நாளையும் [சனி — ஞாயிறு] யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேறவுள்ளது

யாழ். பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் சி. ஜெயசங்கரின் நெறியாழ்கையில் உருவான இந்நாடகம் காலை 9 30 மணிக்கும், மாலை 3 30 மணிக்கும் 4 காட்சிகளாக அரங்கேறவுள்ளதாக சமூக விஞ்ஞான மன்றத்தினர் அறிவித்துள்ளனர். [இ]

## குளவி தாக்கி சிறுமி மரணம்

தென்மராட்சி, மே 20

கருங்குளவிகளால் தாக்கப்பட்ட சிறுமி ஒருவர் மரணம் அடைந்த சம்பவம் சாவகச்சேரி சங்கிளப்பில் இடம் பெற்றது

கே பேனகா (வயது 6) என்பவரே மரணமானவர் ஆவர்.

இவரது தாயார் கே. தங்கபூபதி (வயது 25] இ நிரோஜினி (வயது 7) ஆகியோரும் குளவிகளால் கடியுண்டனர்.

பனையிலிருந்து விழுந்த ஓலையில் இருந்து வெளிப்பட்ட குளவிகளே இவர்களைத் தாக்கின என்று தெரிவிக்கப்பட்டது [இ 1'7]

கொழும்பில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செய்தபோது பொலீஸ் நிலையங்களைத் தாக்கி கைப்பற்றும் திட்டம் குறித்து தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேனன் மற்றும் ரூபன் எனப்படும் அந்த இரு இளைஞர்களும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது

முதலில் தலைநகரில் உள்ள நான்கு பொலீஸ் நிலையங்களை ஒரே சமயத்தில் தாக்க திட்டமிடப்பட்டிருந்தது என்றும்—

அந்த நான்கு பொலீஸ் நிலையங்களையும் அந்த இளைஞர்கள் புகைப்படம் எடுத்துள்ளனர் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

முதலில் பொலீஸ் நிலையங்களின் மின் விநியோகத்தைத் துண்டித்துவிட்டு புகைக் குண்டுகளை வீசி பொலீஸாரைத் திக்குமுக்காடச் செய்துவிட்டு ஆயுதக் களஞ்சியங்களில் இருந்து ஆயுதங்களைக் கைப்பற்றிவிட்டு பொலீஸ் நிலையங்களை குண்டுவைத்து தகர்க்க திட்டமிடப்பட்டிருந்தது என்றும் ... களில் இருந்து தெரியவந்ததாகவும் பொலீஸார் தெரிவித்தனர். [ஐ-3]

## ஒத்திவைக்கப்பட்டுள்ளது

கலைஞர் வேல் ஆனந்தத்தின் கலை நிகழ்ச்சி கள் அவரின் கலா பூஷண விருது வைபவத்தினால் 20 – 05 – 1995 சனிக்கிழமை நடைபெறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிகழ்ச்சித் தினம் பின்பு அறியத்தருவோம்.

நிர்வாகம்,
இலங்கை செஞ்சிலுவை சங்கம்,
யாழ்ப்பாண பிரிவு.

(36719)

இன்று தொடங்கி விட்டது

# நேற்று

இன்றும், நாளையும்,
நாளை மறுநாளும்
மூத்த ஓவியர்களின்
ஓவியக் காட்சி

யாழ். பல்கலைக்கழக. நுண்கலைத்துறையின் ஆதரவில்,
யா. ப. க. பொருளியல் மண்டபத்தில்

அனுசரணை:
கல்யாணி கிறீம் ஹவுஸ்,
யாழ்ப்பாணம்

(36736)

## மரண அறிவித்தல்

### திருமதி சுகிர்தம் மதியாபரணம்

மாவிட்டபுரம் வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சுகிர்தம் மதியாபரணம் 19-5-95 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் A J M மயில்வாகனம், காலஞ்சென்ற மகேசன், G. மயில்வாகனம் ஆகியோரின் சகோதரி ஆவார்.

தகவல்;
ஞானேந்திரன் மயில்வாகனம்

[36735]

## வர்த்தக விடுமுறை இல்லை

தேசிய வீரர்கள் தினமான நாளை மறுதினம் திங்கட்கிழமை (22 ஆம் திகதி) வர்த்தக விடுமுறையாக இருக்க மாட்டாது. அரச, வங்கி விடுமுறை தினமாக மட்டுமே இருக்கும் என்று பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

22 ஆம் திகதியை வர்த்தக விடுமுறையாக்குவதென முன்னர் முடிவாகி இருந்த போதிலும் அது ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

பண்டாரநாயக்கா நினைவு தினமான செப்ரம்பர் 26 ஆம் திகதியை வர்த்தக விடுமுறை நாளாக்குவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. [அ)

## வீரச்சாவு

தொண்டமானாறு பகுதியில் நேற்று முன்தினம் படையினருடன் ஏற்பட்ட மோதலில் இரண்டாம் லெப்டினன்ட் சேரன் (இளையதம்பி மனோகரன் — மட்டக்களப்பு]. கப்டன் மாயவன் (செபஸ்தியாம்பிள்ளை தெய்வேந்திரன் — யாழ்ப்பாணம்) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். (ஐ-7

## சக்தி பற்றிய வகுப்பு

நாட்டின் முக்கிய தேவையான சக்தி பற்றியும் அதற்கான மாற்றீடுகள் பற்றியும் விளக்குமவகையில் சக்தி பெறப்படும் வகைகள் பற்றிய வகுப்பு நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மாணவர் அறிவியல் கழகத்தில் நடைபெறும். ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. [இ-14]

## லங்கா கல்யாணி, ஹபரண நாளை காங்கேசன் வரும்

யாழ்ப்பாணம்' மே 20

இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்களுடன் நேற்று வடக்கு நோக்கிப் புறப்பட்ட "லங்கா கல்யாணி" கப்பலும் —

திருகோணமலையில் இருந்து 2 ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் இன்று புறப்படும் 'ஹபரண" கப்பலும்— நாளை ஞாயிற்றுக் கிழமை காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்விரு கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நாளை மறுதினம் பருத்தித் துறையில் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை— பருத்தித்துறையில் தற்சமயம் பொருள்களை இறக்கிக்கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பல் நாளை மறுதினம் கொழும்பு திரும்பும். (ஐ-3-4)

## வட-கிழக்கு இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு

### ஐ.ஐ.தே. முன்னணி தீர்மானம்

வடக்கு - கிழக்கை நிரந்தரமாக இணைப்பதாயின் அதற்கு சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியைப் பெறவேண்டும்.

போக்குவரத்து மகளிர் விவகார அமைச்சர் சிறிமனி அத்துலத்முதலி தலைமையில் நடைபெற்றஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அரசியல் குழுவின் அவசரக் கூட்டத்தில் இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது

கடந்த செவ்வாய் இரவு இந்தக் கூட்டம் நடைபெற்றது

இந்த விடயத்தில் சர்வசன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியைப் பெறவேண்டும் என்று கட்சியின் முன்னாள் தலைவர் லலித் அத்துலத்முதலி வலியுறுத்தியிருப்பதை தொடர்ந்து கட்சி கைக்கொள்ள வேண்டும் என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

கிழக்கு மக்கள் மத்தியில் அல்லது முழுநாட்டிலும் இது பற்றிய சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எனக் கோருவது என்றும் அரசியல் குழு முடிவு செய்தது.

வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரம் தொடர்பாக தமது கட்சியின் நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு நேரடியாக விளக்கும் நோக்குடன் ஜனாதிபதி சந்திரிகாவை நேற்று மாலை சிறிமனி அத்துலத் முதலி சந்திக்கவிருந்தார். [இ]

அமையது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்று வருவதாகக் குற்றஞ்சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவும் இந்த அமைப்பு வேலை செய்ய போவதாகவும் அஸ்ஸாஜிதோர் தெரிவித்துள்ளார்

கொழும்பில் பௌத்தலோக மாவத்தையில் நடந்த இந்தக் கூட்டத்துக்கு தேசிய கிறிஸ்தவ சபையின் பொதுச் செயலர் வண. டாக்டர் நியன்சி பெரேராவும் வருகை தந்திருந்தார்.

அமைதி சமாதானத்தைப் பெறுவதற்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள மக்கள் கைகோத்து செயற்பட வேண்டுமென நியன்சி பெரேரா குறிப்பிட்டார்.

தெற்கிலுள்ள அமைதி விரும்பும் மக்களுடன் சேர்ந்து செயற்படும் வாய்ப்புக்களை வடக்கில் அமைதியை விரும்பும் மக்கள் பலர் காத்திருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார். (இ-7)

கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை துறைமுகத்தினுள் எடுத்துச் செல்லப்படுவது பாதுகாப்புகாரணங்களுக்காக இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று "வெரித்தாஸ்" வானொலியின் சிங்களசேவையில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## வெளிநாட்டு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிடம் அனுமதிகோரி விண்ணப்பித்திருந்தனர்.

எனினும் அங்கு பாதுகாப்பு நிலைமை உகந்ததாக இல்லை என்று காரணம் கூறி அவர்களின் விண்ணப்பங்களை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துவிட்டதாக தெரிய வந்தது.

இதேபோன்று வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் ... வருவதையும் அரசு தடை செய்துள்ளது. (ஐ-3)

# நவீன ஏவுகணை எதிர்ப்பு ஆயுதம் படையினரிடம்

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மே 20

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களை முறியடிப்பதற்கு தரையில் இருந்து தரைக்குப் பாயும் ஏவுகணைகள் உட்பட அதி நவீன ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் நவீன ஆயுதங்கள் தற்பொழுது பாதுகாப்புப் படையினரிடம் கைவசம் உள்ளன.

இப்படி உயர்மட்டப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக ஆங்கில நாளிதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது

எதிர்காலத்தில் அதிநவீன எதிர்ப்பு ஆயுதங்கள் பொருத்தப்பட்ட இலங்கை விமானப் படை விமானங்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பயன்படுத்தப்படும்.

இந்த நவீன ஆயுதங்களும் ஏவுகணை எதிர்ப்பு ஆயுதங்களும் ஜெட் விமானங்களில் பொருத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# வானத்தில் தீப்பந்தம் எழும்பியதை கண்டேன்

## அவ்ரோ தாக்குதல் குறித்து சாட்சியம்

கொழும்பு, மே 20

'பலாலி ராணுவ முகாமில் இருந்து விமானம் ஒன்று மேற்கிளம்பியதையும் கடல் பக்கத்தில் இருந்து தீப்பந்து ஒன்று எழும்பியதையும் விமானம் தீப்பிடித்ததையும் நான் கண்டேன். பின்னர் விமானத்தின் இடப்பக்க சிறகு உடைந்தது

இவ்வாறு பலாலியில் (ஏப். 28 இல்) 33 பேரைப் பலிகொண்ட விமான விபத்துச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியான ராணுவ அதிகாரி எச். ஆர் சோமரத்ன பண்டார (36) கூறினார்.

அநுராதபுரம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் மேற்படி விமானவிபத்து குறித்த விசாரணை நடைபெற்று வருகின்றது

அநுராதபுரம் நீதிவான் எம். எஸ் என். டி. கொஸ்தா முன்னிலையில் சாட்சியமளிக்கும் போதே அவர்மேற்கண்டவாறு கூறினார்.

சாட்சி மேலும் கூறியதாவது:-

' சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இடைக்காடு இராணுவ முகாமில் நான் கடமையில் இருந்தேன். அன்றைய தினம் பலாலி ராணுவ முகாம் திசையில் இருந்து தீப்பந்து ஒன்று வருவதைக் காணமுடிந்தது. அதுடன் விமானம் ஒன்று பலாலி பிரதேசத்தின் மேல் பறப்பதையும் காணமுடிந்தது

அந்தவேளை நான் வெளியில் நின்றேன் அப்போது ஒரு நிமிட நேரம் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

### அபாய அறிவிப்பு மணி

நான் சத்தம் எதனையும் கேட்கவில்லை. விமானத்தின் இடது சிறகு உடைவதைப் பார்க்க முடிந்தது. ஒரு விமானம் உடைகிறது என நான் கத்தினேன். பின்னர் முகாமின் அபாய அறிவிப்பு மணி ஒலித்தது முகாம் கட்டுப்பாட்டதிகாரியும். இந்த அறிவிப்பு மணி ஒலியைக் கேட்டார். இது ஒலிப்பதற்கு என்ன காரணம் என என்னை அவர் கேட்டார் நான் சத்தமிட்டது அவருக்கும் கேட்டிருந்தது.

பலாலி முகாமுக்கும் நான் கடமையாற்றும் முகாமுக்கும் இடையில் சுமார் ஆயிரம் யார் இடைத்தூரம் இருக்கும்

### எதுவும் மோதுவதை நான் காணவில்லை

முகாமின் பாதுகாப்பு வலயத்துக்குள் விமானம் விழுந்து நொருங்கியது. ஒரு மணித்தியாலத்தின் பின்னர் எரிந்து விழுந்த விமானத்தைப் போய்ப் பார்த்தேன் சுமார் 20 கருகிய சடலங்கள் அங்கு கிடந்தன. விமானம் விழுந்த இடத்துக்கு நானோ மற்றவர்களோ போய்ப் பார்க்க அனுமதிக்கப்படவில்லை. விமானத்தில் தீப்பிடிக்கும் முன்னர் எந்தவொரு பொருளும் அதில் வந்து மோதுவதை நான் காணவில்லை" என்றார்.

## இணைப்பாளர் கைது

யாழ்ப்பாணம், மே 20

யாழ். மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான பொருள்களை கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் வேலைகளை மேற்கொண்டு வந்த இணைப்பாளர் ஒருவர் கொழும்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ். மாவட்டத்தில் சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொருள்களை அனுப்பும் பணியில் கொழும்பில் ஈடுபட்டிருந்த கணேசமூர்த்தி என்ற இந்த இணைப்பாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 3 நாட்களாக தடுத்து வைத்து விசாரிக்கப்படுவதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது. (இ-3)

பாதுகாப்பு காரணங்களுக்காக

## பரல்களில் மண்ணெண்ணெய் அடைக்க விசேட ஏற்பாடு!

யாழ்ப்பாணம். மே 20

வடபகுதிக்கு எடுத்து வரப்படும் மண்ணெண்ணெயை கொழும்பு பெற்றோலியக் கூட்டுஸ் தாபனத்தில் வைத்து பரல்களில் அடைக்க பெற்றோலியக் கூட்டுத் தாபனம் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுஸ் தாபனத்தின் பாதுகாப்பை நோக்கமாகக் கொண்டே இந்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது

தற்சமயம் கொழும்புத்துறைமுகத்தில் தரித்துள்ள'மாஹோர' கப்பலில 12 ஆயிரம் பரல் மண்ணெண்ணெய் ஏற்றப்பட விருக்கிறது.

இந்த மண்ணெண்ணெயை கப்பலில் ஏற்றும் பொறுப்பை எடுத்துள்ள தனியார் முகவர் ஒருவருக்கு படையினர் விசேட பணிப்புரைகளை வழங்கியுள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுஸ் தாபனத்தில் இருந்து 300யாருக்கு அப்பால் மண்ணெண்ணெய் ஏற்றவரும் லொறிகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என்றும் —

மண்ணெண்ணெய் குதங்களில் இருந்து குழாய்கள் மூலம் அந்த லொறியில் உள்ள பரல்களுக்கு மண்ணெண்ணெய் "பம்" செய்யப்படும என்றும் —

பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எக்காரணம் கொண்டும் அந்த லொறிகளில் தமிழர்கள் எவரும்சாரதியாகவோ நடத்துநராகவோ இருக்கக் கூடாது என்றும் கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம். [ஐ-3]

## ஏவுகணைகளை இந்தியா தயார் நிலையில் வைக்கும்!

புதுடில்லி, மே 20

தரையில் இருந்து தரைக்குப்பாயும் நடுத்தர ரக 'பிரிதுவி' ஏவுகணைகளை தயார் நிலையில் வைத்திருப்பது குறித்து இந்திய அரசு ஆலோசித்து வருகிறது.

இது பற்றி முடிவு எடுக்க முன்னர்நாடாளுமன்றத்தில் இது பற்றி அறிவிக்கப்படும் என்று பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்

150 மைல் தூரம் செல்லக் கூடிய "பிரிதுவி" ஏவுகணை எப்போது தயார் நிலையில் வைக்கப்படும் என்பதை பிரதமர் நரசிம்மராவ் வெளியிட வில்லை.

இந்தியாவும் பாகிஸ்தானும் அணு சக்தி வல்லமை பெற்றிருப்பது குறித்து அமெரிக்கா கவலையடைந்துள்ளது அந்நிலையில் இந்தியாவின் ஏவுகணைத் திட்டத்தை அமெரிக்கா எதிர்த்து வருகிறது

"பிரிதுவி" ஏவுகணையுடன் கூடிய ஒரு விஷேட இராணுவப் பிரிவை இந்திய இராணுவம் அமைத்துள்ளது என்றும் —

பாகிஸ்தான் எல்லையில் அந்தப் படைப்பிரிவை இந்தியா நிறுத்தும் என்றும் "ஏசியன் ஏஜ்" என்ற பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. [ஐ]

இ ... நியூ ... பப்ளிகேசன்ஸ் ... லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 - 05 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org